Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 26 இதழ் - 6 ஜூன் 2013

தனிப் பிரதி ரூ. 9/-



# ஜெபித்த உங்களுக்கு நன்றி!

தேவனுடைய கிருபையால் கீழ்க்கண்ட நகரங்களில் நடந்த நற்செய்திக் கூட்டங்கள் தேவனுடைய நாம மகிமைக்காய் நடந்தேறின.

| | | | |
|---|---|---|---|
| 13.6.2013 | திருப்பூர் | சகோ. சேகர் | ஊழியர் |
| 14.6.2013 | சென்னிமலை | சகோ. பன்னீர் செல்வம் | ஊழியர் |
| 15.6.2013 | கொங்கணாபுரம் | சகோ. ஆபிரகாம் | ஊழியர் |
| 16.6.2013 | ஈரோடு | சகோ. ஏசையன் & பால் சாமுவேல் | ஊழியர் |
| 17.6.2013 | சேலம் | சகோ. டேவிட் | ஊழியர் |
| 18.6.2013 | திருப்பத்தூர் | சகோ. சம்மா | ஊழியர் |

## நற்செய்தியாளர்கள்

சகோ. சோனிலீ - அமெரிக்கா

சகோ. டேவிட் பர்டன் - அமெரிக்கா

சகோ. டைரோன் டுபோஸ் - அமெரிக்கா

சகோ. ராஜநாயகம் - காங்கேயம்

ஒருங்கிணைப்பாளர் : சகோ. **பென்னி மார்டின்,** காங்கேயம்.

**ஆசானின் அறிவுரையிலே....**


1. ஆசிரியர் உரை...........1
2. ஏன் பரலோகத்திற்கு.... 9
3. பெண்கள் பகுதி...............14
4. வாலிபர் பகுதி....................17
5. சிறுவர் பகுதி....................20
6. நிழலும், நிறமும்..............22
7. மகிழ்ச்சி ............28
8. அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ......29


**உங்கள் கவனத்திற்கு**

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

- ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 26 JUNE 2013 Issue - 6**


ஆசிரியர் உரை

## நீர் அந்நியராயிருக்கிறீரோ?

அந்நியர் என்னும் இவ்வார்த்தை நம்மில் யாருக்கும் அந்நியமானதாக இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், ஒருவர் ஓர் இடத்திற்குப் புதியவராகவோ அல்லது ஒரு சூழ்நிலைக்கு அறிமுகமில்லாதவராகவோ இருக்கும் போது இவ்வார்த்தையை நாம் பயன்படுத்தியிருப்போம் அல்லது பிறர் பயன்படுத்துவதைக் கேட்டிருப்போம். ஒருவேளை, இவ்வார்த்தைக் கான பொருள் இப்படியாக இருந்தாலும், நாம் இருக்குமிடத்தில் நம்மை அந்நியப்படுத்தி ஒருவர் பேசுவதைப் பெரிதாக விரும்பமாட்டோம். அதுவும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு நாம் சொந்தமானவராகவும், ஒரு சூழ்நிலையை நன்றாக அறிந்தவராகவும் இருக்கும் நிலையில், நம்மை அந்நியராகக் கருதி ஒருவர் பேசுவதை அறவே ஏற்றுக்கொள்ளமாட்டோம். அப்படித்தானே!

ஆயினும், உலக இரட்சகராகிய இயேசு ஆண்டவர் நம்மைப் போல் ஒரு மனிதராக இப்பூமியில் வாழ்ந்த காலத்தில், அவரைப் பின்பற்றின ஏராளமான சீடர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் எங்கும் இருக்கிற, எல்லாம் அறிந்த இயேசுவைப் பார்த்து, " ..... *இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீரோ?"* என்றான் (லூக். 24:18). இது எப்படியிருக்கு? எருசலேமில் நடந்தவைகளுக்கு இயேசு அந்நியராம்! அவன் அறிவின்படியும், கணக்கின்படியும் ஒருவேளை அவன் சொன்னது சரியாக இருக்கலாம். ஆனால், யதார்த்த நிலை? அவர் எருசலேமுக்கும் அந்நியரல்ல, எருசலேமில் நடந்தவைகளுக்கும் அந்நியரல்ல.

உண்மையைச் சொல்லப்போனால், அவர் எருசலேமுக்கு மாத்திர மல்ல, எருசலேமைத் தலைமையிடமாகக் கொண்ட யூதேயாவுக்கும்,

யூதேயா பகுதி அடங்கியிருந்த பெலஸ்தீனா தேசத்திற்கும், பெலஸ்தீனா இடம் பெற்றிருந்த சின்ன ஆசியாவிற்கும், இன்னும் ஆசியா தவிர எஞ்சியிருந்த உலகின் எந்த ஒரு பகுதிக்கும் இயேசு அந்நியர் அல்ல. எப்படியெனில், அப்போஸ்தலனாகிய பவுலடியார் கொலோசெ பட்டணத்து சபைக்கு எழுதின நிருபத்தில் இவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார். " *பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது*" (கொலோ. 1:16) என்று. இயேசுவுக்கு இப்படி எல்லாம் தெரியுமென்று ஆவியானவர் நெத்தியடியாய் வெளிப்படுத்தியிருக்கும் போது, இயேசு எருசலேமுக்கு அந்நியர் என்று எங்ஙனம் கூற முடியும்? இவ்வசனம் இயேசு பூலோகத்திற்கு மாத்திரமல்ல, பரலோகத்திற்கும் அந்நியரல்ல என்ற பொருளிலல்லவா பேசுகிறது. இயேசு அந்நியரல்ல என்பதற்கும் வேறென்ன வேண்டும்?

ஆனாலும், இயேசுவைப் பார்த்து அவருடைய சீடர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன் இப்படிச் சொல்லியுள்ளபடியால், அவன் சொன்னது எந்தச் சூழ்நிலை என்பதைத் தெரிந்து கொள்ள, ஆசானின் வழக்கப்படி இதன் பின்னணிக்குச் செல்லுவோம்.

**உண்மையில், கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) என்று காலத்தைப் பிரித்ததற்குப் பதிலாக, உயிர்த்தெழுதலுக்கு முன் (உமு), உயிர்த் தெழுதலுக்குப் பின் (உபி) என்று பிரித்திருந்தால் உலகின் பார்வையில் அது கிறிஸ்தவத்திற்குக் கூடுதல் வலு சேர்த்திருக்கும் என்றே எண்ணத் தூண்டுகிறது.**

அந்த நாள் உலக சரித்திரத்தின் ஒரு மகத்தான நாள். அந்த நாளுக்கு இணையான ஒரு நாள் இப்பூமியின் சரித்திரத்தில் இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை. ஆம், அது இரட்சகர் இயேசு உயிர்த்தெழுந்த நாள். மரணத்தின் கூரை மழுங்கடித்து ஒடித்த நாள்; மறுமையின் நம்பிக்கையைத் தந்தநாள். உலக சரித்திரத்தை இரண்டாகப் பிரித்த வல்லுநர்கள், கிறிஸ்துவின் பிறப்புக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குக் கொடுக்காமல் போனது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. உண்மையில், கிறிஸ்துவுக்கு முன் (கி.மு.) கிறிஸ்துவுக்குப் பின் (கி.பி.) என்று காலத்தைப் பிரித்ததற்குப் பதிலாக, உயிர்த்தெழுதலுக்கு முன் (உமு), உயிர்த்தெழுதலுக்குப் பின் (உபி) என்று பிரிந்திருந்தால் உலகின் பார்வையில் அது கிறிஸ்தவத்திற்குக் கூடுதல் வலு சேர்த்திருக்கும் என்றே எண்ணத் தூண்டுகிறது. ஏனெனில், கிறிஸ்தவத்தின் உயிர் மூச்சும், அச்சாணியும் உயிர்த்தெழுதல் தான். இப்பேருண்மையைப் பவுலடியார் அறிந்திருந்த படியால் தான் கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் இவ்விதம்

கூறியுள்ளார். " *கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா, மரித்தோர் உயிர்த்தெழா விட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர் களாகவும் காணப்படுவேமே* " (1 கொரி. 15:14,15) என்று. இப்படிப்பட்ட ஒரு மகா நாளில் தான் இச்சம்பவம் நடந்துள்ளது.

அந்த நாளின் அதிகாலை வேளையில், எப்பொழுது விடியுமென்று காத்திருந்த இயேசுவின் மீது அன்பு கொண்ட பெண் சீடர்கள் சிலர், தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களையும், பரிமளத் தைலத்தையும் எடுத்துக் கொண்டு மரித்துப் போன இயேசுவின் சரீரத்திற்கு மரியாதை செலுத்தும்படிக்கு, மூடப்பட்ட கல்லறையை நோக்கி விரைந்தனர். அங்கே அவர்களை கலக்கம் தான் எதிர்கொண்டது. ஆம், இயேசுவின் கல்லறை திறந்து கிடந்தது, கந்தவர்க்கமிடுவதற்கு சரீரத்தையும் காணோம். அதிர்ச்சியில் உறைந்து போனவர்களாய் நின்றவர்களுக்கு தேவதூதர்கள் மூலமாகச் சொல்லப்பட்ட வார்த்தைகள் இதோ. *".....உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்*" (லூக். 24:5,6) என்றார்கள். "அப்பொழுது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவு கூர்ந்து, கல்லறையை விட்டுத் திரும்பிப் போய், இந்தச் சங்கதிகளெல்லாவற்றையும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவித்தார்கள்" (24:5,9). ஆயினும், இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற சங்கதிகளை இயேசுவின் நிழலாக இருந்த பதினொருவரும், இயேசுவின் சீடர்களென்று சொல்லிக் கொண்ட மற்றவர்களும் நம்பவில்லை (24:9,11) இவர்களெல்லாம் இயேசுவுக்குச் சீடர்களாக இருந்துள்ளார்கள்! என்ன சொல்வது?

**இயேசு நமக்குத் தெரியாமல் நம்மோடு கூட வருகிறார் என்பதும், நாம் பேசுவதையும், நம்முடைய காரியங்களையும் கவனிக்கிறார் என்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் எல்லாக் காரியங்களையும் அடக்கி வாசிப்போம், பக்தி காரியங்களில் எச்சரிக்கையாக இருப்போம், சரியா!.**

இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைக் கேட்டும் நம்பாத சீடர்களில் இரண்டு பேர் தான், அந்நாளில் எருசலேமிலிருந்து ஏழு அல்லது எட்டு மைல் தொலைவிலிருந்த எம்மாவு கிராமத்திற்குப் போனார்கள். அப்படிப் போகும்போது, இயேசு உயிர்த்தெழுந்தது சம்பந்தமான யாவையுங் குறித்துப் பேசிச் சென்றார்கள். ஏதோ, இந்த மட்டில் கொஞ்சம் பரவாயில்லை. பேசவாவது செய்திருக்கிறார்கள். அப்படிப் போனபோது, உயிர்த்த இயேசுவும் அவர்களோடு சேர்ந்து கொண்டார். ஆனால், அது அவர்களுக்குத் தெரியவில்லை (24:15,16). அன்பானவர்களே, அவர்களுக்கு அது தெரியாவிட்டால் பரவாயில்லை, நாம் தெரிந்து கொள்ளாமல் விட்டுவிடக்கூடாது. இயேசு நமக்குத் தெரியாமல் நம்மோடு கூட வருகிறார் என்பதும், நாம் பேசுவதையும்,

நம்முடைய காரியங்களையும் கவனிக்கிறார் என்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் நாம் எல்லாக் காரியங்களையும் அடக்கி வாசிப்போம், பக்தி காரியங்களில் எச்சரிக்கையாக இருப்போம், சரியா!.

கூட நடந்த இயேசு அவர்களை நோக்கி, " நீங்கள் துக்கமுகமுள்ளவர்களாய் வழி நடந்து ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிற காரியங்கள் என்ன?" (24:17) என்று கேட்டார். அவர்கள் பேசின காரியங்கள் தெரியாததால் இயேசு இவ்விதம் கேட்கவில்லை. மாறாக, இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைத் தெரிந்து, மகிழ்ச்சி பொங்க எருசலேமின் வீதிகளில் வலம் வராமல், துக்கமுகமாய் எருசலேமை விட்டு நடையைக் கட்டின இவர்களோடு ஓர் உரையாடலை ஆரம்பித்து, அதன் முடிவில் இவர்கள் யார் என்பதை இவர்களுக்கும், நம்மைப் போன்றவர்களுக்கும் தோலுரித்துக் காட்டவே இப்படிக் கேட்டார்.

**அதாவது, நீர் எருசலேம் வாசியாக இருந்தால், இந்நாளில் நடந்தவைகளை நீர் இந்நேரம் அறிந்து வைத்திருப்பீர். அப்படி அறிந்து கொள்ளாமல் "எவைகள்" என்று எங்களிடம் கேட்கிற படியால், நீர் அந்நியராக இருக்க வேண்டுமென்பதே அவன் கணக்கு.**

இயேசுவின் கேள்விக்குப் பதில் கூறும்படியாகத்தான் அவர்களில் ஒருவனாகிய கிலெயோப்பா என்பவன், "*இந்நாட்களில் எருசலேமில் நடந்தவைகளை அறியாதபடிக்கு நீர் அந்நியராயிருக்கிறீர்ரோ* " என்றான் (24:18). அதாவது, நீர் எருசலேம் வாசியாக இருந்தால், இந்நாளில் நடந்தவைகளை நீர் இந்நேரம் அறிந்து வைத்திருப்பீர். அப்படி அறிந்து கொள்ளாமல் "எவைகள்" என்று எங்களிடம் கேட்கிறபடியால், நீர் அந்நியராக இருக்க வேண்டுமென்பதே அவன் கணக்கு. மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, அவன் கணக்கில் பெரிதாகத் தவறு இருப்பது போல் தெரியவில்லை. ஆனால், பிறரைப் பற்றிக் கணக்குப் போடத் தெரிந்தவனுக்கு தன்னைப் பற்றிக் கணக்குப் போடத் தெரியவில்லை. இவனுக்கு மாத்திரமல்ல, அநேகராகிய நம்கும் அதுதான் பிரச்சினை. இயேசுவின் நாட்களில் வாழ்ந்த பரிசேயர்களுக்கு இப்பிரச்சினை மலையளவு இருந்தது. இயேசு ஆண்டவர் மத்தேயு 23ம் அதிகாரத்தில் அவர்களைத் திட்டித் தீர்த்ததற்கான காரணமே அதுதான்.

**எருசலேம் வாசி என்று தங்களைச் சொல்லிக் கொண்டு, அந் நாட்களில் எருசலேமில் நடந்த மகத்தான காரியங்களோடு தங்களை எவ்விதத்திலும் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் ஊரை விட்டே கிளம்பின இவர்கள் எருசலேமுக்கு அந்நியர்களா அல்லது இயேசு அந்நியரா?**

உண்மையில், இயேசு ஆண்டவரை "அந்நியராயிருக்கிறீரோ?" என்று கேட்ட இவர்கள் தான் எருசலேமில் நடந்தவைகளுக்கு

அந்நியராயிருக்கிறார்கள். எப்படியெனில், இயேசுவின் சீடர்களாக இருந்த அவர்கள், இயேசு மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியைக் கேட்டவுடன் என்ன செய்திருக்க வேண்டும்? பேதுருவைப் போல் திறந்து கிடக்கும் கல்லறையைப் பார்த்து, காரியங்களை உறுதி செய்யத் தலை தெறிக்க ஓடியிருக்க வேண்டும். அதுதானே, ஓர் உண்மையான சீடனுக்குண்டான இலட்சணம். அட, குறைந்தபட்சம் எருசலேமில் தங்கியிருந்து அடுத்தது என்ன நடக்கப்போகிறது என்பதையாவது கவனித்திருக்க வேண்டும். ஆனால், இப்படி எதையும் செய்யாமல், எருசலேம் பட்டணத்தை விட்டே கிளம்பி விட்டார்கள். எருசலேம் வாசி என்று தங்களைச் சொல்லிக் கொண்டு, அந்நாட்களில் எருசலேமில் நடந்த மகத்தான காரியங்களோடு தங்களை எவ்விதத்திலும் சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல் ஊரை விட்டே கிளம்பின இவர்கள் எருசலேமுக்கு அந்நியர்களா அல்லது இயேசு அந்நியரா?

இன்னும், இயேசுவை அந்நியராயிருக்கிறீரோ என்று கேட்ட இச்சீடர்கள் எருசலேமுக்கு மாத்திரம் அந்நியராக இராமல், இயேசுவைப் பற்றிய உண்மைகளுக்கும் அந்நியராகவே இருந்துள்ளார்கள். இயேசுவைப் பற்றி இவர்கள் வாயிலிருந்தே வந்த வார்த்தைகளைப் பாருங்கள். "*... அவர் தேவனுக்கு முன்பாகவும், ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செய்கையிலும், வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருந்தார். நம்முடைய பிரதான ஆசாரியரும், அதிகாரிகளும் அவரை மரண ஆக்கினைக்குட்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள்* " (லூக். 24:19,20). இயேசுவைப் பற்றி இவ்வளவு காரியங்கள் தெளிவாகத் தெரிந்திருந்தும், இந்த உண்மைகளினடிப்படையில் நடந்தவைகளைச் சோதித்துப் பார்க்காமல் எம்மாவுக்கு நடையைக் கட்டியிருக்கிறார்களே இது எப்படி நியாயமாகும்? இப்பொழுதாகிலும் புரிகிறதா எருசலேமுக்கும், எருசலேமில் நடந்தவைகளுக்கும் யார் அந்நியர் என்று!

இவர்கள் ஏன் எருசலேமுக்கும், எருசலேமில் நடந்தவைகளுக்கும் அந்நியர்களானார்கள் என்கிற காரணத்தை 21ம் வசனத்தில் காண முடியும். "*....அவரே இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது* " (லூக். 24:21)

**இயேசுவின் சீடர்களாக இருந்து இவர்கள் இயேசுவைப் பற்றியும், அவரின் போதனைகள் பற்றியும் என்னத்தைக் கற்றுக் கொண்டார்களென்றே தெரியவில்லை. சதா மாம்ச சிந்தை.**

என்றார்கள். அதாவது, இஸ்ரவேலின் மீட்புக்குத் தாங்கள் இயேசுவை நம்பியிருந்ததாகவும், அந்த நம்பிக்கையெல்லாம் அடியோடு தகர்ந்தது இன்றோடு மூன்று நாளாகிவிட்டது என்றார்கள். எங்கே போய் இந்த மண்டையை முட்டிக் கொள்வதென்று தெரியவில்லை. உயிர்த்த இயேசு இவர்களோடு நடந்து, உரையாடிக் கொண்டு போகிறார். இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியால் எருசலேம் கலகலத்து நிற்கிறது. இவர்களோ "மூன்று நாளாகிறது" என்று சொல்லி துக்க முகத்தோடு இயேசுவைக் குறித்துப் பேசிச் சென்றிருக்கிறார்கள். இந்த இடத்திலெல்லாம் இயேசு எப்படித்தான் பொறுமை காத்தாரோ

தெரியவில்லை. மறுபடியும் கேட்கிறேன், எருசலேமில் நடந்தவைகளுக்கு யார் அந்நியர்? இப்படி எருசலேமில் நடந்தவைகளுக்கும் இயேசுவைப் பற்றிய உண்மைகளுக்கும் முழுக்க முழுக்க அந்நியராக இருந்து கொண்டு, "இயேசுவை நம்பியிருந்தோம்" என்று வேறு வெட்கமில்லாமல் சொல்லு கிறார்கள். இயேசுவை நம்பின ஒருவனின் செயல்பாடு இப்படித்தான் இருப்பதா?

**உயிர்த்த இயேசு இவர்களோடு நடந்து, உரையாடிக் கொண்டு போகிறார். இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியால் எருசலேம் கலகலத்து நிற்கிறது. இவர்களோ "மூன்று நாளா கிறது" என்று சொல்லி துக்கமுகத்தோடு இயேசுவைக் குறித்துப் பேசிச் சென்றிருக்கிறார்கள்.**

அவர்களின் நம்பிக்கை தான் என்ன? இயேசு இஸ்ரவேலை மீட்டு இரட்சிப்பார். ஆனால், எந்த இஸ்ரவேலை? சரீரப்பிரகாரமான இஸ்ரவேலை. அதாவது, மேசியாவாகிய இயேசுவின் மூலம் ஒரு ஏகாதியபத்திய நாடு, அதற்குத் தலையிடமாக எருசலேம் பட்டணம், அதிலே ஏக சக்கரவர்த்தியாக ஒரு ராஜா அவர் இயேசு என்று அவர்களுக்குப் பல நம்பிக்கைகள். எல்லாமே மாம்ச சம்பந்தமான நம்பிக்கைகள். இவைகளனைத்தும் தகர்ந்து தவிடு பொடியாகிவிட்டதே என்று ஒரே அங்கலாய்ப்பு. இயேசுவின் சீடர்களாக இருந்து இவர்கள் இயேசுவைப் பற்றியும், அவரின் போதனைகள் பற்றியும் என்னத்தைக் கற்றுக் கொண்டார்களென்றே தெரியவில்லை. சதா மாம்ச சிந்தை. நம்முடைய நாட்களில் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லித் திரிகிற ஏராளமான மக்களை இவர்கள் அப்படியே பிரதிபலிக்கிறார்கள். இயேசு, சரீரப்பிரகாரமான இஸ்ரவேலுக்காகவா இப்பூமிக்கு வந்தார்? இல்லை, இல்லவே இல்லை. அவர் சரீரப்பிரகாரமான இஸ்ரவேலை மீட்டு இரட்சிக்கும்படியாக வரவேயில்லை. மாறாக, ஒட்டுமொத்த உலகத்தின் மக்களை ஆவிக்குரிய ரீதியில் விடுவிக்கும்படியாகவே வந்தார். " *இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனஷ குமாரன் வந்திருக்கிறார்* ". என்று (லூக். 19:10). இயேசு தாமே சொல்லியிருக்கிறார். இயேசுவின் சீடர்க ளென்று சொல்லிக் கொண்ட அவர்களுக்கு இந்த உண்மைகளெல்லாம் தெரியாதபடியால் தான் தங்களைச் சொந்தமானவர்களென்று எண்ணிக் கொண்டே அந்நியர்களானார்கள். கண்களைத் திறந்து கொண்டே குழியில் விழுந்த கதையாகவல்லவா இருக்கிறது!

அன்பானவர்களே, இயேசு உயிர்த்தெழுந்த நாளில் நடந்தது போல் தான், இயேசுவின் வருகையின் நாளிலும் நடக்கப் போகிறது. இயேசுவுக்கும், அவருடைய ஊழியங்களுக்கும் நாங்கள் சொந்தமானவர்களென்ற நினைப்போடு தங்கள் பக்தி வாழ்க்கையைப் பகட்டோடு நடத்திக் கொண்டி ருக்கிற மிகப் பெரும்பாலான கிறிஸ்தவ சமுதாயம் இயேசுவுக்கு அந்நியர் களாகப் போகிறார்கள். இயேசு ஆண்டவரே இது குறித்துச் சொல்லியிருப்ப தைக் கவனியுங்கள். " *அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே!*

*கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்* " (மத். 7:22,23). "ஒருக்காலும் உங்களை அறியவில்லை" என்பதும், நீங்கள் எனக்கு அந்நியர் என்பதும் ஒன்றுதானே! இவர்களெல்லாம், "உமது நாமத்தினாலே, உமது நாமத்தினாலே " என்று சொல்லி, என்று நினைத்து, தாங்கள் தேவனுக்குச் சொந்தமானவர்களென்று எண்ணி வாழ்ந்தவர்கள். ஆனால், எம்மாவு ஊர் சீடர்கள் போல், தங்கள் நினைப்புக்கு மாறாக, தங்கள் செயல்களால் இயேசுவின் பார்வையில் இயேசுவுக்கு அந்நியமானவர்கள். அப்படியானால், நாம் எப்படிப் பட்டவர்களாக உள்ளோம்?

அருமையானவர்களே, நாமும் நம்மை சொந்தமானவர்களென்று நினைத்துக் கொண்டு நம்முடைய சொந்தக் குடும்பத்திலேயே அந்நியமாவதற்கு வாய்ப்புண்டு. அதற்குச் சிறந்த உதாரணம், நம்மால் கெட்ட குமாரன் என்று முத்திரையிடப்பட்டிருக்கிற இரண்டு குமாரர்கள் பற்றிய உவமை. இந்த உவமையை இயேசு தாமே சொல்லியிருக்கிறார் (லூக். 15:11,32), இது நம் எல்லோருக்குமே பரிச்சயமான உவமை. துன்மார்க்க வாழ்வைத் தெரிந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறின இளையகுமாரன், புத்தி தெளிந்து, தன் தகப்பனிடத்திற்குத் திரும்பி வந்தான். எப்பொழுது திரும்பி வருவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்து, " *அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக்கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்* " (லூக். 15:20) காணாமற் போனவன் திரும்பி வந்ததினிமித்தம், வீட்டில் பெரிய மகிழ்ச்சியும், விருந்தும், ஆட்டம் பாட்டமும் இருந்தது (15:23,25).

**எப்படியெனில், தகப்பனோடு வீட்டில் இருந்தான். ஆனால், தகப்பன் எப்படிப்பட்டவர் என்பதை அறியாதவனாகவே இருந்தான். இளையவனைப் பற்றிய தகப்பனுடைய மனநிலை என்ன, அவனைப் பற்றி தகப்பனுடைய விருப்பம் என்ன? தகப்பன் யாரை ஏற்றுக் கொள்வார், யாரை ஏற்றுக்கொள்ளமாட்டார், சகோதர பாசம் என்றால் என்ன என்று இப்படி எந்த அறிவும் இல்லாதவனாகவே வீட்டில் தகப்பனோடு வாழ்ந்து வந்துள்ளான். அப்படி வாழ்ந்ததால் என்ன பயன்? இவனை அந்த வீட்டிற்கு அந்நியன் என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்ல முடியும்?.**

இவைகளெல்லாம் நடந்து கொண்டிருந்தபோது வயலிலிருந்த மூத்த குமாரன் திரும்பி வந்தான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. " *ஊழியக் காரரில் ஒருவனை அழைத்து இதென்ன என்று விசாரித்தான்* " (வச. 26). அதற்கு அவன்; உம்முடைய சகோதரர் வந்தார், அவர் மறுபடியும் சுகத்துடனே உம்முடைய தகப்பனிடத்தில் வந்து சேர்ந்தபடியினாலே அவருக்காக இந்த விருந்தெல்லாம் என்று சொன்னான். அப்பொழுது அவன் கோபமடைந்து,

உள்ளே போக மனதில்லாருந்தான். தகப்பனோ வெளியே வந்து, அவனை வருந்தியழைத்தான் (வச. 27,28).


இந்த உவமை நமக்குத் தரும் பாடம் என்ன? இளைய குமாரனைப் போல் வீட்டை விட்டு வெளியேறாமல் வீட்டிலேயே இருந்த மூத்த குமாரன் வீட்டிற்குச் சொந்தமானவனா அல்லது அந்த வீட்டுக்கு அந்நியனா? நீங்களே சொல்லுங்கள். நிச்சயமாகவே அவன் அந்நியன் தான்! எப்படியெனில், தகப்பனோடு வீட்டில் இருந்தான். ஆனால், தகப்பன் எப்படிப்பட்டவர் என்பதை அறியாதவனாகவே இருந்தான். இளையவனைப் பற்றிய தகப்பனுடைய மனநிலை என்ன, அவனைப் பற்றி தகப்பனுடைய விருப்பம் என்ன? தகப்பன் யாரை ஏற்றுக்கொள்வார், யாரை ஏற்றுக்கொள்ளமாட்டார், சகோதர பாசம் என்றால் என்ன என்று இப்படி எந்த அறிவும் இல்லாதவனாகவே வீட்டில் தகப்பனோடு வாழ்ந்து வந்துள்ளான். அப்படி வாழ்ந்ததால் என்ன பயன்? இவனை அந்த வீட்டிற்கு அந்நியன் என்று சொல்லாமல் வேறெப்படிச் சொல்ல முடியும்?. எம்மாவுக்குச் சென்ற கிலெயோப்பா என்பவன் இயேசுவைப் பார்த்து, " நீர் அந்நியரோ " என்று கேட்டதின் முகாந்திரம் என்ன? எருசலேம் வாசியாக இருந்தால் எருசலேமில் நடந்தவைகள் தெரிந்திருக்க வேண்டும். தெரியாதபடியால் நீர் அந்நியர், அது தானே அவன் கணக்கு. அந்தக் கணக்கின்படி இந்த மூத்த குமாரனும் அந்நியன் தானே!

அது சரி, நம்முடைய சரீரப்பிரகாரமான வீட்டிலும், ஆவிக்குரிய வீடாகிய சபையிலும் (1 தீமோ. 3:15) நாம் ஒவ்வொருவரும் வீட்டிற்குச் சொந்தமானவர்களாக உள்ளோமா அல்லது அந்நியர்களாக உள்ளோமா? சரீர குடும்பத்தில் ஒரு தகப்பனாகவோ, தாயாகவோ, பிள்ளைகளாகவோ, சகோதரனாகவோ, சகோதரியாகவோ நாம் இருக்கலாம் அல்லது ஆவிக்குரிய வீடாகிய சபையில் மூப்பர்களில் ஒருவராகவோ உதவிக்காரராகவோ, ஓர் ஊழியராகவோ, விசுவாசிகளில் ஒருவராகவோ இருக்கலாம். பரலோகத்தின் தேவன் சரீர குடும்பத்திலிருப்பவர்களுக்கும், ஆவிக்குரிய குடும்பத்தில் இருப்பவர்களுக்கும் சில பொறுப்புகளையும், கடமைகளையும் தந்திருக்கிறார். அவைகளை அறிந்தவர்களாக, புரிந்தவர்களாக, அவைகளுக்கு மனப்பூர்வமாக நம்முடைய பங்களிப்பை சத்தியத்தின்படி செய்கிறவர்களாக இன்னும் தேவன் ஏற்றுக்கொள்ளுகிற அளவில் அவைகளை நிறைவேற்றுகிறவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருந்து கொண்டு உள்ளோமா?.

ஒருவேளை, நாம் அப்படியில்லையென்றால், நாம் யாராக இருந்தாலும், எவ்வளவு காலம் அந்தக் குடும்பத்திலும், எவ்வளவு வருடங்கள் சபையாகிய ஆவிக்குரிய குடும்பத்திலும் அங்கமாக இருந்தாலும் அந்நியர்களாகவே இருப்போம். எவ்வித சந்தேகமும் வேண்டாம்.

ஆகையால், அருமையானவர்களே, நம்முடைய நிலையை நாம் உய்த்துப் பார்த்து, இயேசுவால் " நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை " என்று சொல்லப்பட்டு, பரலோகத்திற்கு அந்நியர்களாகிவிடாதபடி, நாம் நம்மைக் காத்துக் கொள்ளுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✳



# ஏன் பரலோகத்திற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது?

**Bro. J.C. சோட்**

மத உலகில் நாம் பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டு என்பது போன்ற வாக்கியங்களை அடிக்கடி கேட்கிறோம். அதுமட்டுமல்ல, நாம் எல்லோரும் வித்தியாசமான பாதைகளில் பயணிக்கிறோம். ஆனால், நாம் எல்லோருமே ஒரே இடத்திற்குச் செல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்றெல்லாம் பேசக் கேட்கிறோம். இப்படிப் பேசப்படுபவைகள் குறித்து நாம் நேரம் எடுத்து சிந்திக்காவிட்டால், அவைகளெல்லாம் சரிதானே என்பது போல தோன்றும். ஆனால், நிச்சயமாகவே அது வேதாகம உபதேசத்திற்கு மாறானதாயிருக்கிறது.

வேதாகமம் பரலோகம் பற்றியும், அதன் மொத்த அழகைப் பற்றியும், வரவிருக்கின்ற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எப்படி ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் நேர்த்தியாகச் சொல்கிறது. கிறிஸ்து இப்படியாகச் சொன்னார். *"உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள், என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன்; நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்"* (யோவான் 14:1-3). ஆகவே, இயேசுவை விசுவாசிக்கிற எல்லாரும், அவர் ஆயத்தமாக்கியிருக்கிற பரலோகத்தை விசுவாசிக்கிற எல்லாரும், நிச்சயமாகவே அங்கே போக விரும்புவார்கள். ஆனால், கேள்வி என்னவென்றால், நாம் எப்படி அங்கே போக முடியும்? அங்கே போவதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறதா? அல்லது அநேக வழிகள் இருக்கிறதா?

இயேசு மறுபடியும், *"நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"* என்று சொன்னார் (யோவான் 14:6). பிதாவினிடத்தில் செல்வதற்கு வழி, ஒரே வழி இயேசு தான் என்பதை கவனியுங்கள், ஒருவர் பிதாவினிடத்தில் கிறிஸ்துவினால் அல்லது கிறிஸ்து மூலமாக மட்டுமே செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்வதற்கு அநேக வழிகள் இருந்தால் கிறிஸ்து மாத்திரம் ஒரே வழியாக இருக்கமாட்டார்.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பனாகவும், கிறிஸ்தவர்களை ஆடுகளாகவும், சபையை ஆட்டுத்தொழுவமாகவும் சித்தரிக்கிறார். இங்கே

இயேசு வாசலைப்பற்றி என்ன சொல்கிறார் என்று கேளுங்கள்: " *நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " (யோவான் 10:7). இயேசு தொடர்ந்து, "*நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும், புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்* " என விளக்கு கிறார் (யோவான் 10:9). இயேசு மறுபடியும், " *மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஆட்டுத் தொழுவத்தை வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்ளனும், கொள்ளைக்காரனு மாய் இருக்கிறான்*" என்றார் (யோவான் 10:1). வேறு விதமாய்ச் சொன்னால், இயேசு அந்த ஆட்டுத் தொழுவத்துக்கு வாசல் என்று சொல்கிறார், சபைக்குச் செல்வதற்கு ஒரே வழி என்றும், பரலோகம் செல்வதற்கும் ஒரே வழி தான் என்றும் சொல்கிறார். அவர் அதன் பின்பு ஒருவன் ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறினால் அவன் கள்ளனாக, கொள்ளைக்காரனாக கருதப்பட வேண்டும் என்று சொல்கிறார். ஆனால், முடிவிலே திருடர்களுக்கும், கொள்ளைக்காரர்களுக்கும் என்ன நடக்கும்? அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாவிட்டால் தேவனுடைய ராஜ்யம் அல்லது சபை அல்லது பரலோகத்திற்குள் பிரவேசிக்கக்கூட முடியாது என்கிறார். நிச்சயமாகவே, கர்த்தர் கொடுத்திருக்கிற வழியல்லாமல் வேறு வழியாய் பரலோகம் செல்ல முயற்சி செய்கிறவன் நரகத்தில் தள்ளப்படுவான்.

மற்றுமொரு சூழ்நிலையில் இயேசு தம்மைச் சுற்றிலும் கூடியிருந்த ஜனங்களை நோக்கி இப்படிச் சொன்னார். " *இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமா யிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக் கிறவர்கள் சிலர்* " என்றார் (மத். 7:13, 14). நாம் ஒவ்வொருவரும் இடுக்கமான வாசல் வழியாய் பிரவேசிக்க வேண்டும் என்று இயேசு சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இடுக்கமான வாசல் இயேசுவை அடையாளப் படுத்துகிறது.

இயேசு தான் சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழி. அதன் மூலமாக ஒருவர் பரலோகத்திற்குக் கடந்து செல்கிறார். இயேசு தொடர்ந்து சொல்லும் போது, இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் தங்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் நெருக்கமான வழியைக் கண்டடை கிறார்கள். இந்த விஷயத்தில் ஒரே வாசல், ஒரே வழிதான் இருக்கிறது. அந்த ஒரே வழிதான் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லும். யார் இந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்த வர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்கு உண்மையா யிருப்பவர்கள். அதன் பின்பு, கிறிஸ்து அடுத்தவழி பற்றி பேசுகிறார். வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிற கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியில் பயணம் செய்பவர்கள் பற்றி. இதில் பயணிக்க யார் துணிவார்? பெரும் பாலானவர்கள், மாம்சசிந்தை உடையவர்கள் மற்றும் தேவபக்தியற்றவர்கள்.

கிறிஸ்துவின் அதிகாரத்தை ஏற்க மறுத்து, தங்கள் வழியில் காரியங்களைச் செய்யமுடியும் என காரண காரியங்களைக் காட்டுபவர்கள் தான். விசாலமான வழியில் பயணிப்பவர்கள். இன்னும் மனிதனால் உண்டாக்கப் பட்ட சபைகளில் சேருபவர்கள்; மனுஷருடைய பெயர்களை தரித்துக் கொள்பவர்கள், தங்கள் பிரியத்தின்படி ஆராதிப்பவர்கள். இவர்கள் தான் ஏமாற்றப்பட்டவர்கள், மற்றவர்களை ஏமாற்றுபவர்கள். உண்மையில்லாத கிறிஸ்தவனும் இந்தக் கூட்டத்தில் தான் இருப்பான். ஆனால், இந்தப் பாதை அல்லது வழி எங்கே அழைத்துச் செல்கிறது? இது, நித்திய அழிவுக்கு அழைத்துச் செல்கிறது. ஆம், இவர்களில் அநேகர் நேர்மையும், உண்மையு மானவர்களாய் இருப்பார்கள். அவர்கள் எல்லாவற்றிலும் பக்தியுள்ளவர் களாயுமிருப்பார்கள். ஆனால், அவர்கள் விசாலமான வழியில் இருக்கிற காரணத்தால் இழந்து போவார்கள்.

என் நண்பர்களே, ஒரு முக்கிய தலைநகரத்திற்குச் செல்வதற்கு பல வழிகள் இருக்கிறது. ஆனால், உங்களிடம் ஒருவர் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக மட்டும் பயணம் செய்ய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்திருக்கும் நிலையில், நீங்கள் வேறொரு வழியைத் தெரிந்து கொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் பிரச்சனையில் மாட்டிக்கொள்வீர்கள். அதுபோலவே, கிறிஸ்துவுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் வல்லமையும் உண்டு (மத். 28:18). அந்த அதிகாரத்திற்கு நாம் மரியாதை கொடுத்து கர்த்தர் கொடுத்திருக்கிற அறிவுரைகளை நாம் பின்பற்றும் போது அதுவும் இதே விதமாகத்தான் இருக்கிறதென்பதைக் காணமுடியும். கர்த்தர் வகுத்துத் தந்திருக்கும் பாதையில் நாம் பயணம் செய்வது அவசியம்.

பரலோகத்திற்குச் செல்லும் வழி பற்றி நாம் பேசுவதில் நமக்கு இருக்கும் பிரச்சனை என்னவென்றால், மனித புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் நாம் அதை அணுகுவது. ஒரு பட்டணத்துக்கு அநேக வழிகள் இருந்து, எல்லா வழிகளுமே ஒருவரை அந்த பட்டணத்துக்கு அழைத்துச் செல்வது உண்மை யானால், ஆவிக்குரிய ரீதியிலும் இது உண்மையாகத்தானே இருக்க வேண்டும். ஆனால், கர்த்தரைப் பொறுத்தவரை, அவருடைய வழியைப் பொறுத்தவரை, ஒன்றே ஒன்று தான் இருக்கிறது. வேறு வழிகள் இருக்கிறது போல் நமக்குத் தெரியலாம், பல மத நம்பிக்கைகள், மனுஷருடைய சபைகள் போன்று வேறு வழிகள் நமக்குத் தெரியலாம். ஆனால், இவைகள் எல்லாம் பரலோகத் திற்கு செல்லும் வழிகள் அல்ல. மனிதனால் உண்டாக்கப்பட்ட வழிகள் மற்றும் அமைப்புகள் மூலமாக யாரும் பரலோகம் செல்ல முடியாது. இதை உணர்ந்து கொள்வதற்கு, நாம் செய்ய வேண்டியதெல்லாம், வேதாக மத்தைத் திறந்து வாசிப்பது தான். கிறிஸ்து இப்படியாகச் சொன்னார் "*மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்*" என்று (மத். 15:9).

அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் ", (மத். 7:21-23). இதே மாதிரியான அநேக வாக்கியங்களை

வேத வசனங்களில் நாம் காண முடியும். நாம் தேவனுக்கு கீழ்ப்படியாமலிருந்து, காரியங்களை நம் வழியில் செய்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதனால் உண்டாக்கப்பட்ட பெயர்களைத் தரித்து, நாம் தெரிந்து கொள்ளுகிறபடி ஆராதித்து, நாம் எந்த வழியில் பயணிக்க விரும்புகிறோமோ அதே வழியில் பயணித்து அதே நேரத்தில் பரலோகம் செல்ல முடியும் என்று நம்மால் நினைக்க முடிகிறதா? ஒருவேளை நாம் அப்படிச் சிந்திக்கத் தலைப்பட்டால், நிச்சயமாக நாம் தவறு செய்கிறவர்களாயிருப்போம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியாய் இருந்தார். தன் மார்க்கத்திற்காக பக்தி வைராக்கியமாக இருந்தார். கர்த்தருடைய சபையை அவர் துன்பப்படுத்தின போதிலும் அவருக்கு நல்மனச்சாட்சி இருந்தது. ஆனால், தான் தவறு செய்ததை அவர் கண்டு கொண்டார். அவர் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப, கர்த்தருக்கு கீழ்ப்படிந்த போது தான் இரட்சிக்கப்பட்டார் (அப். 9 மற்றும் 22 அதிகாரங்கள்). ஆனால், கொர்நேலியுவும் அவன் வீட்டாரும் எப்படி? அவர்கள் நல்லவர்களாக இருந்தார்கள். அவர்கள் தான தர்மங்களைச் செய்து அடிக்கடி பரலோகத்தின் தேவனிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். ஆயினும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படி, ஞானஸ்நானம் பெறக் கட்டளையிடப்பட்டார்கள். அப்போஸ்தலர் 10 ஆம் அதிகாரம் பரலோகம் செல்வதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது என்கிற உண்மைக்கு ஆதரவாக வசனங்களில் அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

என் நண்பர்களே, இது பற்றி யோசித்துப் பாருங்கள். வேதாகமம் ஒரே தேவனும், ஒரே கர்த்தர் அல்லது ஒரே இரட்சகரும், ஒரே பரிசுத்த ஆவியும், ஒரே சரீரம் அல்லது சபையும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், ஒரே நம்பிக்கையும் உண்டு என்று போதிக்கிறது (எபே. 4:1-6). வேதாகமம் ஒரே ஒரு நற்செய்தி அல்லது இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழிதான் இருக்கிறது என்று சொல்கிறது. கர்த்தர் இரட்சகராயிருக்கிறார், ஒவ்வொரு வரும் இரட்சிக்கப்பட ஒரே விதமாக செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவிகொடுக்கவும் (மத். 17:5) அவரை விசுவாசிக்கவும் (யோவான் 8:24) அவரவர் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும் (லூக்கா 13:3) கிறிஸ்துவை தேவனுடையகுமாரன் என்று அறிக்கையிடவும் (மத். 10:32) பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவும் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (மாற்கு 16:16; அப். 2:38). கிறிஸ்து அதே நற்செய்தி தான் முழு உலகத்திற்கும், சர்வசிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் (மாற்கு 16:15,16). கிறிஸ்து இரட்சிக்கப்பட்ட எல்லோ ரையும் தாம் கட்டின சபையில், எந்த சபைக்காக மரித்தாரோ அந்த சபையில், தன் சுயரத்தத்தினாலே எந்த சபையை வாங்கினாரோ அந்த சபையில், எந்த சபைக்கு அவர் தலையாயிருக்கிறோ அந்த சபையில், எந்த சபைக்காக ஒரு நாள் திரும்பி வரப்போகிறாரோ அந்த சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப். 2:47; மத். 16:16; எபே. 5; அப். 20:28). தேவன் தம்மை எல்லோரும் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என விரும்புகிறார் என்று வேதாகமம் போதிக்கிறது (யோவான் 4:24). ஆகவே, எல்லோரும்

வாரத்தின் முதல் நாளிலே கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்காக, ஜெபிப்பதற்காக காணிக்கை கொடுக்கும்படியாக, தேவனைத் துதித்துப் பாடும்படியாக கூட வேண்டும் (அப். 20:7; II தீமோ. 2:15; அப். 2:45 ; எபே. 5:19). தேவன் தம்முடைய ஜனங்க ளெல்லாரும் எல்லாவற்றையும், கிறிஸ்துவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் என்று விரும்புகிறார் (கொலோ. 3:17). அதன் பொருள், எல்லோரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொள்ளவேண்டும் (அப்.11:26). மற்றும் எல்லாரும் உண்மையுள்ள கிறிஸ்தவ ஜீவியத்தை நடத்த வேண்டும் (வெளி. 2:10) என்பதே.

நாமெல்லாரும் வாசிக்கவும், விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் நம் அனைவருக்கும் ஒரே வேதாகமம் இருக்கிறது. நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு உண்மையாய் இருந்தால் நாம் செல்வதற்கு ஒரு பரலோகம் இருக் கிறது. அது போலவே, பாவிகளும், உண்மையில்லாதவர்களும் செல்வதற்கு நரகம் ஒன்று இருக்கிறது (மத். 25:46).

இப்போது, இதற்கு முன்பு சொல்லப்பட்டவைகளெல்லாம் உண்மை யாக இருந்து, நீங்களாகவே வேத வசனங்களை வாசித்து, படித்து, அவைகள் உண்மைதான் என்று நீங்களாகவே பார்க்க முடிந்தால், பரலோகத்திற்கு ஒரு வழிக்கு மேல் எப்படி இருக்க முடியும்? ஆம், பரலோகம் செல்வதற்கு வழி ஒன்று இருக்கிறது, ஒரே ஒரு வழி தான் இருக்கிறது, அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியில் நாம் பயணம் செய்யும் படி, அந்த வழியை நாம் ஏற்றுக் கொண்டு, கர்த்தர் நம்மை என்ன செய்யும்படியாக சொல்கிறாரோ அதைச் செய்தால் நாம் ஞானமுள்ள வர்களாயிருப்போம். நாம் வேறுவழியாக பரலோகம் செல்லவே முடியாது. ஞானி இப்படியாகச் சொன்னார் மனுஷருக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் (நீதி. 14:12).

எந்தப் பாதையில் நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள்? இடுக்க மான வழியிலா? அல்லது விசாலமான வழியிலா? கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியிலா? அல்லது பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழியிலா? ஒரே நேரத்தில் உங்களால் இரண்டு வழிகளிலும் பயணம் செய்ய முடியாது. எந்த மனிதனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது என்று கிறிஸ்து சொன்னார் (மத். 6:24). நாம் ஒன்று அவரோடி ருக்கிறோம் அல்லது அவருக்கு விரோதமாக இருக்கிறோம் என்று இயேசு சொன்னார் (மத். 12:30). ஆகவே, நாம் எந்த வழியில் பயணம் செய்வது எனத் தீர்மானிப்பது நம் கையில் விடப்பட்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்து வையும், பரலோகத்திற்குச் செல்லும் வழியையும் தெரிந்தெடுக்கும்படியாக நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம். ✻

சந்தோஷம் என்பது நாம் பகிர்ந்து கொள்ளும்போது மட்டுமே பெருகுகிறதாக இருக்கிறது.

பெண்கள் பகுதி

# கீழ்ப்படியாமைக்கு ஏதிரான ஓர் எச்சரிக்கை

Sis. RACHEAL NAYAGAM

சோதோம் கொமோராவின் துன்மார்க்கம் பெருகியபோது தேவன் அதை அழிக்கத் திட்டமிட்டார். அங்கு வாழ்ந்த நீதிமானாகிய லோத்திடம் தன் மனைவி, பிள்ளைகளுடன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே, இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே என்றார். அவன் மனைவியோ பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள். இந்த சம்பவம் ஆதி 19ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து தன் சீஷர்களுக்கு போதித்துக் கொண்டிருக்கும்போது "லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்" (லூக். 17:32) என்று சொன்னார். கீழ்ப்படியாமை அவளுடைய பாவமாயிருந்தது. கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இம்மாதம் கீழ்ப்படியாமை என்ற பாவம் பற்றி சிறிது கற்றுக் கொள்வோம்.

தேவன் எப்போதும் நாம் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். நம்மை சிருஷ்டித்த தேவன் நம்முடைய நன்மைக்காக சில சட்ட திட்டங்களை கொடுக்கும்போது நாம் அதற்கு கீழ்ப்படிய வேண்டும்; அதை மீறி நடக்கும்போது வேதனை, சமாதானமின்மை, ஆவிக்குரிய மரணம் இவைகள் வந்து சேருகிறது.

கீழ்ப்படிதல் என்பது கற்றுக் கொள்ளப்படக்கூடிய ஒன்று. தன் இஷ்டப்படி செயல்படக் கூடியவனாகப் பிறந்த மனிதனுக்கு ஒழுங்கு படுத்தப்படுவதும், ஒரு கட்டுக்குள் கொண்டு வரப்படுவதும் அவசியமாகிறது. கிறிஸ்துவும் கீழ்ப்படிதலைக் கற்றுக்கெண்டார். பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் (எபி. 5:8) என்று வாசிக்கிறோம். தேவக்குமாரனாயிருந்தும் நம்மைப் போல மனிதனாக இருந்ததினால் கீழ்ப்படியாமல் போக வாய்ப்பிருந்தது. ஆனாலும், பாடுகளினூடே வாழ்ந்து தன் பிதாவின் சித்தத்திற்கு மேல் செல்லாமல் தன் சித்தத்தை கீழே வைத்தார். அவர் தான் நமக்கு முன்மாதிரி. நாமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று பலவழிகளை பயன்படுத்தி நம்மை கீழ்ப்படியச் செய்கிறார். கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொடுத்து, கீழ்ப்படியாதவர்களுக்கு கடுமையான விளைவுகளைக் கொடுத்து தன் சித்தத்தை செய்யும்படி செய்கிறார்.

பாவம் செய்த தூதர்களை தேவன் விட்டு விடவில்லை. நோவாவின் நாட்களில் வாழ்ந்தவர்களை

விட்டுவிடாமல் அழித்தார். முழுமையான கீழ்ப்படிதல் தேவை (2 பேதுரு 2:4,6) இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளை மீறும் போது அது கீழ்ப்படியாமையாகிறது. உதாரணமாக, தேவனுடைய வார்த்தையோடு கூட்டுவது, குறைப்பது பாவமாகும். வெளி. 22:18,19 ஆகிய வசனப்பகுதியில் தேவனுடைய வசனத்தோடும் ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ வேண்டாம் என்று பார்க்கிறோம். சில வேளைகளில் தேவன் ஒன்று சொல்லியிருக்க நாம் நமக்கு பிடித்தமானதை செய்து விடுவது. காயீன், ஆபேல் சம்பவத்தில் நாம் இதைப் பார்க்க முடியும். தான் சொல்லாததை செய்யும் போதும், சொன்னதை செய்யாதபோதும் தேவன் அவற்றை அங்கீகரிப்பதில்லை.

பாதி கீழ்ப்படிந்து, மீதியை தங்கள் விருப்பம்போல் செய்வதும் கீழ்ப்படியாமைதான். சவுல் ராஜா, அமலேக்கியரை அழிக்கும்படியாக கட்டளை பெற்ற போது அதை முழுமையாகச் செய்யாமல், தேவனுக்கு பலி செலுத்தும்படியாக சிலவற்றை விட்டு வைத்தான் (1 சாமு. 15:1,24). பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தல் உத்தமம் என்று தீர்க்கதரிசியால் எச்சரிக்கப்படுகிறார்.

அருமையானவர்களே, இந்த "கீழ்ப்படியாமை" க்கு காரணங்கள் என்னவென்று பார்த்தால் அதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் *இருதயம் ஒரு காரணம்.* இவர்கள் தமக்குப் பிடிக்காத கட்டளைகளுக்கு கீழ்ப்படியமாட்டார்கள். வேறு சிலர் மனச்சாட்சியை காரணம் காட்டுவார்கள். தேவன் ஒன்றை வேதத்தில் சொல்லியிருக்க அதை விட்டு, விட்டு, தங்கள் மனதிற்கு எது சரியோ அதை செய்ய முற்படுவார்கள். சபையை துன்பப்படுத்தியது அப். பவுலின் மனச்சாட்சிப்படி சரியான தாகத்தான் அவருக்குப்பட்டது அப். 23:1. ஆனால், பின்னாளில் அவரே சொல்கையில், "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்" (அப். 26:9) என்று சொன்னார்.

*உலக ஆசை* கீழ்ப்படியாமைக்கு ஒரு காரணமாகிறது. லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்தாளென்றால் அதற்குக் காரணம் அவர் இருதயம் இன்னும்

## பெருமையின் பேரழிவுகள்

1. பெருமை கொடூரமான செயல்களைச் செய்ய காரணமாகிறது (எஸ்தர் 3:5,6)
2. பெருமை பழிவாங்குதலுக்கு வழிவகுக்கிறது (யாத். 14:5)
3. பெருமை உலகத்தன்மைக்கு ஒப்புவிக்கிறது (1 சாமு. 8:19,20)
4. பெருமை ஐசுவரியத்தில் நம்பிக்கை வைக்க காரணமாகிறது (எசே. 28:4,5)

சோதோமின் மேல் இருந்தது. *தவறான போதகர்களை பின்பற்று வது* கீழ்ப்படியாமைக்கு காரணமா கிறது. "அவர்கள் குருடருக்கு வழி காட்டுகிற குருடராயிருக்கிறார்கள். குருடனுக்குக் குருடன் வழிகாட்டி னால் இருவரும் குழியிலே வாழு வார்கள்" என்றார் (மத். 15:14). " கோழைத்தனம்" கீழ்ப்படியா மைக்கு ஒரு காரணமாகி விடுகிறது. இயேசு குற்றமற்றவர் என்று தெரிந் திருந்தும் ஜனக் கூட்டத்திற்கு செவி கொடுத்து இயேசுவை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தான் பிலாத்து.

பிரியமானவர்களே, கீழ்ப் படிதல், என்றால் என்ன? கீழ்ப்படி யாமைக்கான காரணங்கள் பற்றி பார்த்தோம்.தேவன் நம்மிடம் எதிர் பார்ப்பது என்னவென்றால் முழுமை யான கீழ்ப்படிதல். எனவே, முழுமை யான கீழ்ப்படிந்த கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தோமென்றால் தான் பரலோகம் என்பது நமக்கு சொந்தமாகும். இல்லையென்றால் நாம் சுய திருப்திபட்டுக் கொண்டு இருப்போமேயன்றி பிரயோஜனம் ஏதும் இருக்காது. ஆகவே, வேத வசனத்திற்கு அப்படி யே கீழ்ப்படியக் கூடியவர்களாக வாழ்வோம். அப்படி வாழ பரலோகத் தின் தேவன் உதவி செய்வாராக! ஆமென்!. ✳

## விசுவாசம் என்பது என்ன?

1. தேவனுடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை யாயிருப்பது (எபி. 11:6)
2. சோதனையை மேற்கொள்வது (எபே. 6:16)
3. அறியாமையை மேற்கொள்வது (2 தீமோ. 3:15)
4. ஜெபத்தில் உறுதியாயிருப்பது (யாக். 5:15,16)
5. மனரீதியாக தேவன் தான் எல்லாம் என்று நம்புவது, ஏற்றுக்கொள்வது (அப். 17:28)

வாலிபர் பகுதி

# நெஞ்சை நெகிழ வைக்கும் நெகேமியா

**Bro. Benny Martin**

வருடத்திற்கு ஒரு முறை வரும் வசந்த காலம் போல் வாழ்க்கையில் ஒரு முறை வரும் வாலிபப் பருவத்தில் இருக்கும் வாலிபர்களுக்கு வானவராம் இயேசுவின் வல்ல நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களை மாதந்தோறும் மறக்காமல் காண்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஈடுபாடு இல்லாமல் இருப்பதை நாம் காண முடியும். அவர்களுடைய சிந்தனையும் செயலும் சரீரப்பிரகார மான அல்லது பூமிக்குரிய காரியங்களில் வேர் கொண்டிருப்பதையும் நாம் காண முடியும். வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் ஆவலாயிருப்பதற்கு தேவ தாசானாகிய நெகேமியா நிச்சயமாகவே ஒரு தூண்டுகோலாக இருக்கிறார். முதலாவது, இந்த நெகேமியா என்ற பெயரின் அர்த்தத்தை நாம் பார்க்கலாம். நெகேமியா என்பதற்கு யெகோவாவின் ஆறுதல் என்று அர்த்தம். இந்த நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்த சஷ்டாவுக்கு பானபாத்திரக் காரனாக சேவை செய்து கொண்டிருந்தார். அவர் பெர்சிய நாட்டின் தலை நகராயிருந்த சூசான் அரண்மனையில் இருந்தபோதிலும் எருசலேமைப் பற்றியும், அங்கே தேவனுக்கடுத்த காரியங்களில் கொண்டிருந்த அக்கறை பற்றியும் நாம் பார்க்கலாம்.

## I. நெகேமியாவின் துக்கம் :

நெகேமியா சூசான் அரண்மனையில் பானபாத்திரக்காரனாக பணி புரிந்து கொண்டிருக்கும்போது, எருசலேமில் தன்னுடைய ஜனங்களாகிய யூதர்களைப் பற்றி யூதாவிலிருந்த சில மனிதர்களால் குறிப்பாக தன்னுடைய சகோதரரில் ஒருவனாயிருந்த ஆனானி மூலமாக கேள்விப்பட்டு அதிக துக்கமடைந்தார். இடிக்கப்பட்ட எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் இருந்தது இன்னும் அதிக துக்கத்தை அவருக்கு ஏற்படுத்தியது. நெகேமியா 1:14 வசனங் களில் நாம் நெகேமியாவின் துக்கத்தையும், இஸ்ரவேலின் துரதிஷ்டமான நிலையையும் காணலாம். இந்த வசனப்பகுதியை படிக்கும் போது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய காரியங்களில் அக்கறை காட்டும் தேவதாசர்களைப் பற்றிய வசனப்பகுதிகள் நம் நினைவுக்கு வருகின்றன (எரேமியா 9:1; ரோமர் 9:1,3). இந் நூற்றாண்டில் வாலிபர்களின் வளர்ப்பு முறை, கல்வி முறை, வேலை முறை போன்றவைகள் அவர்களை ஆவிக்குரிய காரியங்களில் அக்கறை காட்டாதபடி வெகு தூரத்திற்கு அழைத்துச் செல்கிறது. ஆனால், வாலிபர்கள் தேவ காரியங்களில் ஈடுபடாமலிருக்க சூழ்நிலைகளைக் காரணம் காட்ட முடியாது. வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் நிச்சயமாக ஆத்துமபாரமுடையவர்களாக, தேவக்காரியங்களில் தேறினவர்களாக இருக்க முடியும். இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்தபோது பாடுகள் நிறைந்த மனிதராக வாழ்ந்தார்

என்று வேறு வசனங்களில் நாம் காண்கிறோம். நாம் இவ்வுலகில் கிறிஸ்துவினிமித்தம் பாடுபட்டால், துயரம் கொள்வது மாத்திரமல்லாமல் நாம் வாழும் இவ்வுலகத்திலேயே நமக்கு ஆறுதல் உண்டு. சரி, இப்போது நெகேமியாவின் மிகுந்த துக்கத்திற்கான காரணங்களைப் பார்ப்போம்.

நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவின் பானபாத்திரக் காரனாக பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் முதன் முறையாக ராஜாவின் சமூகத்தில் துக்கமாயிருந்தார். பொதுவாக, அந்நாட்களில் பெரிய ராஜாவுக்கு வேலை செய்கிறவர்கள் ராஜாவுக்கு முன்பாக முகமலர்ச்சியுடன் காணப்பட வேண்டும். இல்லையெனில் மரணம் அல்லது வேலை இழப்பு போன்ற துரதிஷ்டமான நிலைக்குத் தள்ளப்படுவார்கள். நெகேமியா இதை நன்றாக அறிந்திருந்தபடியால் ராஜா நெகேமியாவைப் பார்த்து " நீ துக்கமாயிருக்கிறது என்ன? " என்று கேட்டபோது நெகேமியா மிகவும் பயந்ததாக நெகே 2:2ல் வாசிக்கிறோம். ராஜா நெகேமியாவின் குணாதிசயங்களை நன்கு அறிந்தி ருந்தபடியால் நெகேமியாவிடம் பிரியமாகவே இருந்தார். மேலும், நெகேமியா வியாதியாயிருக்கவில்லை என்பதை அறிந்திருந்த ராஜா நெகேமியாவுக்கு ஏதோ மனதின் துக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு காரியம் என்னவென்று மென்மையாக அவரிடம் வினவினார். ராஜாவின் சாந்தமும், இரக்கமும் சம்பாஷணைக்கு வழி வகுத்தது. நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தபிறகு அந்த சம்பாஷணை அல்லது உரையாடல் தொடங்கியது. உண்மையிலேயே இந்த நெகேமியா புத்தகம் முழுவதிலும் நெகேமியா தான் ஒரு சிறந்த ஜெபவீரன் என்பதை நிரூபித்திருக்கிறார். பிரியமானவர்களே! நெகேமியா எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டு, அதின் மதில்கள் இடிக்கப்பட்டு கட்டப்படாமல் இருந்ததினால் துக்கமாக இருந்தார் என்று பார்த்தோம் அல்லவா இப்போது எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி யைப் பார்ப்போம்.

## II. எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி

முதலாவது, நாம் பாபிலோனிய சிறைபிடிப்பின் மூன்று கட்டங்கள் அல்லது எருசலேம் மூன்று முறை கைப்பற்றப்பட்டதை கவனிப்போம்.

யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு மூன்று வருடங்கள் சேவை செய்தான். அதன்பின்பு அவருக்கு விரோதமாக கலகம் செய்தான். நேபுகாத் நேச்சார் எருசலேமைக் கைப்பற்றி யோயாக்கீமை கட்டுகளுடன் பிடித்துச் சென்றார். அப்போது சில யூத இளைஞர்கள் (தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ) உட்பட பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போனார்கள். அது மாத்திரமல்ல, நேபுகாத் நேச்சார் எருசலேம் தேவாலயத்தில் இருந்த பணி முட்டுகளை எடுத்து பாபிலோனிருந்த தன்னுடைய தேவனின் ஆலயத்தில் வைத்தான் (2 ராஜா 24:1,7; தானி. 1:1,7).

அடுத்ததாக, யோயாக்கீம் எருசலேமில் மூன்று மாதங்களும், பத்து நாட்களும் ஆட்சி செய்த பிறகு நேபுகாத்நேச்சார் இரண்டாவது முறையாக

எருசலேமைக் கைப்பற்றினார். அப்போது அவன் யோயாக்கீம் உட்பட தேவாலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரண்மனையின் பொக்கிஷங்களையும், தேவாலயத்தில் உண்டாயிருந்த பணிமுட்டுகளையெல்லாம் எடுத்துக்கொண்டு பாபிலோனுக்கு சென்று விட்டான் (ராஜா 24:10,10).

மூன்றாவது, நேபுகாத்நேச்சாரின் பத்தொன்பதாம் வருடம், ஐந்தாம் மாதம் ஏழாவது நாளில் அவனுடைய இராணுவ தளபதி நெபுசராதான் எருசலேமுக்கு விரோதமாக அனுப்பப்பட்டான். அவன் தேவாலயத்தையும், ராஜாவின் வீட்டையும் எரித்துப் போட்டான். மேலும், இவன் எருசலேம் பட்டணத்தின் மதில்களையும் இடித்துப்போட்டான் (2 ராஜா 25:8,21) இந்த இடிந்து போன மதில்கள் கட்டப்படாமல் கிடந்ததால்தான் நெகேமியா துக்கமாக இருந்தார். இந்த மதில்களை கட்டி எழுப்புவதற்கு ராஜாவிடமிருந்து அனுமதி பெற்றுக்கொண்டு எருசலேமுக்குச் சென்றார். நெகேமியா வேலைத் தொடங்குவதற்கு முன்பு ஆயத்த வேலைகளைச் செய்தார், அது நகரத்தை சோதனை செய்வது உட்பட பல காரியங்களை உள்ளடக்கியது (2:12,15). தேவாலயத்தைக் கட்டுவதற்கான பொருட்கள் பற்றி தான் நன்கு அறிந்தவராய் யூதர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், பிரபுக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், வேலையாட்களுக்கும் நன்கு பரியச்சயப்பட்டிருந்தார். மதில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது எத்தனையோ எதிர்ப்புகள் வந்தது. ஆனால், நெகேமியா அவைகளைக் கண்டு துவண்டு போகவில்லை. மதில்கள் கட்டி முடிக்கப்பட்டபோது நெகேமியாவின் எதிரிகள் அந்தக்கிரியை தேவனால் கை கூடி வந்ததென்று அறிந்து கொண்டார்கள்.

## III நெகேமியாவிடமிருந்து பாடங்கள்

பொதுவாக தேவனுடைய வேலைகளில் ஒருவர் அக்கறைக் கொண்டு அதை நடைமுறைப்படுத்த தன்னை ஈடுபடுத்தும் போது சாத்தான் எவ்விதத்திலாவது அவரை சோர்வடையச் செய்வான், எப்படியாவது தேவனுடைய வேலையைத் தடுப்பதில் அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக சுற்றித் திரிகிறான். நெகேமியா மதில்களைக் கட்டினபோது சாத்தான் எத்தனையோ தடைகளைக் கொண்டு வந்தான். ஆனால், எல்லாத் தடைகளையும் தேவனுடைய உதவியினால் அவர் தகர்த்தெறிந்தார். நெகேமியா பிரச்சனைகள் வந்த போதெல்லாம் ஜெபித்தார் (நெகே. 4:1,5,9). அவர் எதிரிகளோடு சமரசம் செய்து கொள்ளவில்லை. நெகேமியா எப்படி பாழாய்க் கிடந்த மதில்களை கட்டி எழுப்ப மக்களை ஒன்று திரட்டி அவர்களை உற்சாகப்படுத்தி மதில்களைக் கட்டி எழுப்பினாரோ, அதுபோல நாமும் கூட ஜனங்களை தேவனிடத்தில் கொண்டு செல்லும் பணியைச் செய்ய வேண்டும். நமக்கு முன்னால் இருக்கும் பணியை எப்பாடுபட்டாவது செய்து முன்னேறுவோம். கர்த்தருடைய வேலைகளை கூட்டாகச் சேர்ந்து செய்வோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

*

சிறுவர் பகுதி

# தன்னிகரற்ற வேதாகமம்

Dr. ABEL R. NAYAGAM

கிறிஸ்துவுக்குள் அன்பான தம்பிகளே, தங்கைகளே! நம் கையில் இருக்கும் வேதாகமத்தின் சிறப்பு பற்றி கொஞ்சம் பார்க்கலாமா?.

பொதுவாக, வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு செல்லும் போது, தங்கள் வழக்குக்கு ஆதரவான அநேக சாட்சியங்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவார். நாமும் வேதாகமத்தை படிக்கும் போது அது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதற்கு ஏராளமான சாட்சியங்கள் இருப்பதைப் பார்க்க வேண்டும். யாருமே உட்கார்ந்து ஒரு புத்தகத்தை எழுதி விடலாம். எது வேதாகமத்தை மற்ற புத்தகங்களை விட மேலான ஒன்றாக மாற்றுகிறது?.

ஒரு வழக்கறிஞர் வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்தது தான் என்பதை நிரூபிக்க என்ன சாட்சியத்தை பயன்படுத்துவார்? மனிதர்கள் தங்களுடைய கண்டு பிடிப்புகள் எனச் சொல்வதற்கு பல நூற்றாண்டுகள் முன்பாகவே வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிற விஞ்ஞானத் தகவல்களை எல்லாம் சேகரிப்பார். வேதாகமப் பக்கங்களில் இடம் பெற்றிருக்கிற மறைந்திருக்கிற ஆழங்கள் எல்லாம் உண்மைகள் என்று சமீப காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டு அவை விஞ்ஞானத் தகவல்களாக வந்து இருக்கின்றன.

உதாரணமாக, கடந்த காலங்களில் மக்கள் சமுத்திரத்தின் அடிமட்டம் எல்லாம் ஒரு நீச்சல் குளத்தைப் போன்றோ அல்லது ஒரு பண்ணைக் குளத்தின் அடிமட்டத்தைப் போன்றோ தான் இருக்கும் என கருதினார்கள். அதாவது மென்மையாகவும், சமமாகவும் இருக்கும் என கருதினார்கள். 1873-1876 ஆண்டுகளில் சேலஞ்சர் சாகச பயணக் குழுவினர் சமுத்திரத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது, பசிபிக் கடலில் 51/2 மைல்கள் ஆழமுள்ள மலைகளுக்கு இடையேயுள்ள பள்ளத்தை கண்டுபிடித்தனர்.

ஆயினும், இந்த சேலஞ்சர் சாகச பயணக் குழு இதை கண்டு பிடிப்பதற்கு பல ஆயிரக்கணக் கான வருடங்களுக்கு முன்பே யோனா தீர்க்கதரிசி கடலுக்கு அடியில் மலைகள் இருப்பதையும், பள்ளத்தாக்குகள் இருப்பதையும் சொல்லியிருக்கிறார் (யோனா 2:5,6).

மேலும், நாம் வாழும் இந்த பூமியின் வடிவம் பற்றி அநேக காரியங்கள் அறியப்படுவதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசியான ஏசாயா பூமி வட்ட வடிவில் உள்ளது என்பதை தெரிவித்தார் (ஏசாயா 40:22). மேலும், இயேசு வர விருக்கின்ற நியாயத் தீர்ப்பைப் பற்றிச் சொல்லும் போது சிலர் இரவில் தூங்கிக் கொண்டிருப்பதாகவும், மற்றவர்கள் வயல் வெளியில் வேலை செய்து கொண்டு அல்லது இயந்திரம் அரைத்துக் கொண்டு இருப்பதாகவும் கூறுகிறார் (லூக். 17:34-36) பூமி உருண்டையாக அல்லது வட்டமாக இல்லையென்றால், ஒரு சிலர் இரவிலும் அதே நேரத்தில் மற்றவர்கள் பகலிலும் எப்படி இருக்க முடியும்?

மேலும், வேதாகமம் கால நிலை மாதிரியை உருவாக்கும் பூமியிலிருந்து புறப்பட்டு வரும் நீரூற்றுகளின் காற்றைப் பற்றிப் பேசுகிறது (பிர. 1:6) மனிதர்கள், ஆறுகளையும், பள்ளத்தாக்கு களையும் கணிப்பதற்கு பல ஆண்டுகள் முன்பே எல்லா நதி களும் சமுத்திரத்திலே ஓடி விழுந் தும் சமுத்திரம் நிரம்பாது என்று சாலொமோன் குறிப்பிட்டிருக் கிறார். சமுத்திரங்களைப் பற்றி படிப்பவர்கள் சமுத்திரங்கள் இயற்கையாகவே பாதைகளைப் பெற்றிருக்கின்றன என்பதை நிர்ணயித்திருக்கின்றனர். இதை வேதாகமம் பல ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே குறிப்பிட்டிருக் கிறது (சங். 8:8; ஏசாயா 43:16).

வேதாகமம் நீர் சுழற்சி களைப் பற்றிக் கூட பேசுகிறது (ஆமோஸ் 9:6; யோபு 36:27, 28) மேலும், வேதாகமம் சமுத்தி ரத்தின் நடுவில் நல்ல தண்ணீர் உள்ள நீரூற்றுகள் இருப்பதாகக் கூறுகிறது (யோபு 38:16). ஆனால் இந்த உண்மையை சமீப காலத்தில் தான் நீர் மூழ்கிக் கப்பலின் வாயிலாக கண்டுபிடித்துள்ளனர். தெளிவா கவே, இந்த சாட்சியங்கள் எல்லாம் வேதா கமம் ஒரு சாதாரண புத்தகம் அல்ல என்பதை நிரூபிக்கிறது. மனிதர்கள் கண்டுபிடிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே விஞ் ஞானத் தகவல்களை பதிவு செய் திருக்கிற தேவ ஆவியினால் ஏவப் பட்ட எழுத்தாளர்கள் தான் வேதாக மத்தை எழுதியிருக்கிறார்கள். வேதாகமம் மெய்யாகவே தேவனு டைய வார்த்தைகளைத்தான் உள்ளடக்கியிருக்கிறது.

இதை வாசித்த அன்பு தம்பி, தங்கைகளே, வேதாகமம் தனித் தன்மை வாய்ந்தது. எந்த ஒரு நூலோடும் ஒப்பிட முடியாது. எனவே, தினமும் வேதம் வாசித்து, அதன் மூலம் தேவ ஆலோசனை பெற்று நம்முடைய வாழ்க்கையை ஆசீர்வாதமாக்கிக் கொள்வோம். ✳

## செம்மையான எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேதாகமத்திலிருந்து ஆலோசனைகள்

1. தினந்தோறும் வேத வசனங்களினால் நம் மனதை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் (ரோமர் 12:2).
2. கிறிஸ்துவின் சிந்தையை நமது ஆயுதமாக தரித்துக் கொள்ள வேண்டும் (1 பேதுரு 4:1)
3. தேவனுடைய வார்த்தையில் நமது மனதை நிரப்பி அதன்படி செயல்பட வேண்டும் (சங். 119:94,97).
4. நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும் (தீத்து 2:6)

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. J.H. James Rajakumar**

அன்பானவர்களே!

திருமறை ஆசான் பத்திரிக்கை வாயிலாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் உங்களுக்கு நன்றிகளை சொல்வதோடு வாழ்த்துகிறேன். சென்ற இதழிலும் அதற்கு முன்னான இதழிலும் பழைய, புதிய ஆசாரியத்துவங்கள் பற்றியும் அதன் மாற்றங்கள் பற்றியும் மேலும் புதிய ஏற்பாட்டின் சபை பற்றியும், அதன் நிர்வாகம் பற்றியும் சபையில் மூப்பர்களின் முக்கியத்துவம் பற்றியும் கவனித்தோம்.

இந்த மாதத்தில் பரிசுத்த ஆவியானவர் எபிரெயருக்கு எழுதும் போது ஆசாரியத்துவத்தைப் பற்றியும் அதன் மாற்றத்தைப் பற்றி குறிப்பிடும் போது இப்படி விவரிக்கிறார். " ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும் " (எபி. 7:12). இந்த வசனத்தில் இரண்டு கருத்துக்கள் மிகவும் ஆணித்தரமாக சொல்லப் பட்டுள்ளது. (1) ஆசாரியத்துவம் அதாவது பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் ஆரோனைக் கொண்டு ஏற்படுத்தின ஆசாரியத்துவம் மாற்றப்பட்டு விட்டது. ஆகையால், இனிமேல் அதாவது, பெந்தெகொஸ்தே நாட்கள் தொடங்கி அந்த ஆசாரியத்துவத்தை யாரும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. (2) ஆகையால், நியாயப்பிரமாணம் மாற்றப்பட்டு விட்டது. இயேசு கிறிஸ்து வின் சிலுவையிலே பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணம் முடிக்கப்பட்டு புதிய ஏற்பாடு தொடங்கப்பட வேண்டியது தேவனுடைய திட்டம். அப்படியே தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு அதை செய்து முடித்தார் என்பதை இந்த வார்த்தைகள் தெளிவுபடுத்துகிறது.

இங்கே ஒரு காரியத்தை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டை அல்லது உடன்படிக்கையை இயேசுவின் சிலுவையில் முடித்து புதிய ஏற்பாட்டை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே ஏற்படுத்தி அதன் மூலமாக இந்த உலகத்தை கிறிஸ்துவின் காலத்திலே பரிபூரணமாக இரட்சிக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமும் தீர்மானமுமாகும். ஆனால், இஸ்ரவேலர்கள், அதாவது யூதர்கள் பிடிவாதமாக மோசேயும், பழைய ஏற்பாடும் தேவாலயமும் தான் எங்களுக்கு முக்கியம் என்று வீண் நம்பிக்கையும் வைராக்கியமும் கொண்டிருந்ததால் தேவன் அவர்கள்மேல் மிகவும் கோபமாயிருந்தார். அதன் விளைவாக கி.பி. 70ல் ரோமப் பேரரசின் இளவரசனாயிருந்த தீத்து இராயனால் எருசலேமையும் தேவாலயத்தையும் தீக்கொளுத்தி முற்றிலுமாக அழித்தார். இது தேவனுடைய செயல் என்பதற்கு

கிறிஸ்துவின் வார்த்தைகள் நமக்கு அத்தாட்சியாயிருக்கிறது. "இயேசு தேவாலயத்தை விட்டுப் புறப்படுகையில், அவருடைய சீஷர்கள் தேவாலயத்தின் கட்டடங்களை அவருக்குக் காண்பிக்க அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி; இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டு போகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் ". (மத். 24:1,2; மாற்கு 13:1,2; லூக். 21:5,6) இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? பழைய ஏற்பாடும், அதன் தேவாலயமும், ஆசாரியத்துவமும், சடங்குகளும், பண்டிகைகளும் ஒழிந்துவிட்டது. இனிமேல் புதிய ஏற்பாட்டின் படிதான் விசுவாசிக்க வேண்டும், அதன்படிதான் செயல்பட வேண்டும் இதுதான் தேவனுடைய சித்தம் என்பது தெளிவாயிருக்கிறது.

தேவன் திடீரென்று புதிய ஏற்பாட்டை அல்லது புதிய உடன்படிக்கையை தொடங்கி விடவில்லை, இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வாக்குத்தத்தங்களை ஆதியாகமம் 3:15 தொடங்கி சொல்லி வந்தாலும் புதிய ஏற்பாட்டைக் குறித்து திட்டமாக கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பே தேவன் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக சொல்லிவிட்டார். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன் (எரேமியா 31:31). இந்த வசனம் சுமார் 600 ஆண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்துவின் மூலமாக இந்த உலகத்திலே தேவன் புதிய உடன்படிக்கையைக் கொண்டு வருவார் என்பதையும் அவர்களோடு புதிய உடன்படிக்கையின் மூலமாக உறவை, சொந்தத்தை ஏற்படுத்துவேன் என்பதையும் முன்னுரைக்கிறார். இதே வசனத்தை எபிரெய ஆசிரியர் தன்னுடைய நிருபத்தில் எடுத்துக் கையாண்டு உறுதிப்படுத்தியிருக்கிறார் (எபி. 8:8)

அடுத்த வசனத்தில், இன்னும் சில கருத்துக்களை வலியுறுத்துகிறார். "நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வரக் கைப் பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில், நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன் படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார் " (எரே. 31:32). இதே வசனத்தை பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் எபிரெயருக்கு எழுதும் போது எடுத்துக் கையாண்டு உறுதிப்படுத்துகிறார் (எபி. 8:9). இந்த வசனங்கள் நமக்கு வலியுறுத்தும் கருத்துக்கள் என்னவென்றால் இரண்டு உடன்படிக்கையையும் தேவன் ஒப்பிட்டுப் பேசுகிறார். அதில் ஒரு கருத்தை திட்டமாகச் சொல்லுகிறார். இரண்டு உடன்படிக்கைகளும் ஒன்று அல்ல. பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் ஒன்றாக இணைத்துப் பார்க்கக்கூடாது. இரண்டும் வெவ்வேறானவைகள். ஒரே நேரத்தில் நம்மால் இரண்டு உடன்படிக்கையின் செயல்பாடுகளிலும் இணைந்திருக்க முடியாது என்பதை தெளிவுபடுத்துகிறார். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலர்களை மோசேயின் மூலமாக சிவந்த சமுத்திரம் வழியாக அழைத்து வந்து சீனாய் மலையண்டை அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படியல்ல என்று தெளிவுபடுத்துகிறார். இதிலிருந்து புதிய

ஏற்பாடு வேறு, பழைய ஏற்பாடு வேறு. புதிய ஏற்பாட்டின் ஆராதனை, உபதேசம், ஆசாரியத்துவம், நம்பிக்கை, ஆசீர்வாதங்கள் போன்றவை வேறு, பழைய ஏற்பாட்டின் ஆராதனை முறை, உபதேசம், ஆசாரியத்துவம், நம்பிக்கை மற்றும் ஆசீர்வாதங்கள் வேறு என்பது தெளிவாகிறது.

ஆனால், இன்றைக்கு அநேகர், பூமிக்குரிய இஸ்ரவேல் மக்களைப் போல பழைய ஏற்பாடாகிய நியாயப்பிரமாணமும் அந்த ஆராதனை முறைகளும், ஆசீர்வாதங்களும் தான் முக்கியம் அவைதான் வேண்டும் என்று பிடிவாதமாக இருப்பது மட்டுமல்ல அப்படியே போதித்து கோடிக் கணக்கான மக்களையும் தேவனுடைய சித்தத்திலிருந்து விலக்கி நடத்திச் சென்று விடுகிறார்கள். தேவனுடைய சித்தத்தையும், தீர்மானத்தையும் விட்டு விட்டு இவர்கள் யாருக்கு ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் தேவனுக்கு அல்ல மனிதனுக்கும் மனிதனுடைய அதிகாரத்துக்கும் ஊழியம் செய்கிறார்கள். ஆனால், பரிசுத்த ஆவியானவர் தெளிவாகச் சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து இரண்டாவதை நிலைநிறுத்த வந்தார். அதாவது, புதிய உடன்படிக்கையை அல்லது புதிய ஏற்பாட்டை நிலை நிறுத்த வந்தார். அந்த நேரத்தில் அவர் முதலாவதை நீக்கிப் போடுவார். அதாவது, பழைய ஏற்பாட்டையும் அதன் நடைமுறைகள் எல்லாவற்றையும் நீக்கிப் போடுவார் என்று எபிரெயர் 10:9ல் உறுதிப்படுத்துகிறார். " தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார் ".

மேலும், எரே. 31:32ல் இஸ்ரவேல் மக்களோடு பண்ணின உடன்படிக்கையை நீக்கிப் போடுவதற்கான காரணத்தையும் அவர் விவரிக்கிறார். அவர்களுக்கு தேவன் ஒருவரே நாயகராயிருந்தும் அவர்கள் என் உடன்படிக்கையை மீறி அதை அவமாக்கிப் போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தேவனை விட்டுவிட்டு வேறே தேவர்களை பின்பற்றிச் சென்றார்கள். அவர்கள் தேவனை நம்புவதை விட்டுவிட்டு அந்நிய தேசங்களின் இராஜாக்களையும், படைவீரர்களையும், இரதங்களையும் நம்பினார்கள். இப்படி அவர்கள் தேவனுடைய வல்லமையையும், பரிசுத்தத்தையும், தெய்வீகத்தையும் விட்டுவிட்டு, விக்கிரகங்களை வணங்கி மாம்சமாகிய மனிதர்களை நம்பினதால் தேவன் அவர்களுக்குக் கொடுத்த உடன்படிக்கையை அழித்து விடுவது தேவனுக்கு நீதியாயிருக்கிறது. தேவன் பாவத்தை வெறுக்கிறார். பாவியை நேசிக்கிறார். அதற்காக பாவிகளோடு உடன்படிக்கை பண்ணமாட்டார். இந்த காரணத்திற்காக இஸ்ரவேல் மக்களை சிவந்த சமுத்திரத்தின் மூலமாக ஞானஸ்நானம் கொடுத்து சுத்திகரித்து அழைத்து வந்து அவர்களோடு உடன்படிக்கை பண்ணினார் (1 கொரி. 10:1,2) (இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் எவைகளை அறிய வேண்டுமென்றிருக் கிறேனென்றால்; நம்முடைய பிதாக்களெல்லாம் மேகத்துக்குக் கீழாயிருந் தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்து வந்தார்கள். எல்லாரும் மேகத்துக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்

பண்ணப்பட்டார்கள்) தேவன் தந்த சுத்தத்தை, பரிசுத்தத்தை அவர்கள் விட்டு விட்டபடியால் இனிமேல் இருதிறத்தாரும் அதாவது தேவனும், இஸ்ரவேல் மக்களும் ஒருங்கிணைந்து செயல்பட முடியாது.

இதற்காக நமக்கு ஒரு நல்ல உதாரணம் இருக்கிறது. தேவனுடைய கட்டளையை மீறாத வரைக்கும் ஆதாம் ஏவாள் தேவன் உலாவுகிற தோட்டத்திலே வாசம் செய்தார்கள். தேவனுடைய சட்டத்தை மீறி பாவம் செய்து பாவிகளான பிறகு தேவனுடைய சமூகத்திலிருந்து ஐக்கியத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். இது இஸ்ரவேலருக்கும் இன்றைக்கு நமக்கும் பொருந்தும். இஸ்ரவேல் மக்கள் தேவன் அவர்களுக்குக் கொடுத்த தேவனுடைய உடன்படிகையை மீறினதால் இனிமேல் தேவன் அவர்களாடு தொடர்புடைய வராக இருக்க முடியாது. ஆகவே, அந்த உடன்படிக்கை அவசியமில்லாததாகி நீக்கப்பட்டுவிட்டது.

இன்றைக்கு யாராவது புதிய உடன்படிக்கை செய்துவிட்டு அதை மீறினால் புதிய உடன்படிக்கை நீங்கிப் போகாது. புதிய உடன்படிக்யையின் ஐக்கியத்திலிருந்து கிறிஸ்துவின் ஐக்கியத்திலிருந்து பாவம் செய்கிற ஆத்துமா நீக்கப்பட்டுவிடும். அப்படியானால் பழைய ஏற்பாடு மட்டும் முழுவதுமாக ஏன் நீக்கப்பட்டது என்று கேள்வி கேட்கலாம். அதற்கும் பரிசுத்த ஆவியானவர் பதில் தருகிறார். ரோமர் 3ம் அதிகாரம் 1 முதல் 23 வசனங்கள் வரை விவாதித்து (10ம் வசனம்) "எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களாகி", (வசனம் 23) என்று விவரிக்கிறது. ஆகையால், இந்த விவாதத்தின்படி பார்த்தால் புதிய ஏற்பாட்டை மாத்திரம் கை கொண்டு தேவனோடும், கிறிஸ்து வோடும் பரிசுத்த ஆவியானவரோடும் ஐக்கியமாயிருக்கிற கிறிஸ்தவர்கள் இன்றைக்கும் இருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது.

யாராவது ஒருவர் எபிரெயர் 10ம் அதிகாரம் 9ம் வசனத்தில் சொல்லப் பட்டுள்ள இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறார். அதாவது, புதிய உடன்படிக்கையை (ஏற்பாட்டை) நிலை நிறுத்து வதற்கு பழைய ஏற்பாட்டை (உடன்படிக்கையை) நீக்கிப் போடுகிறார் என்பது அதன் அர்த்தமே விளக்கமோ அல்ல என்று சொல்வார்களானால் அவர் களோடு பேச நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோம். ஏனென்றால், நிச்சயமாக தேவன் கிறிஸ்துவின் மூலம் பழைய உடன்படிக்கை அல்லது ஏற்பாடாகிய நியாயப்பிரமாணத்தின் பலிகள் ஆராதனை முறைகள் போன்றவற்றை நீக்கிவிட்டார் என்று இந்த எபிரெயர் 10ம் அதிகாரம் விவரிக்கிறது.

இன்றைக்குக் கூட அநேகர் நம்புகிறார்கள் புதிய ஏற்பாடு கிறிஸ்து பிறந்தது. முதல் தொடங்குகிறது என்று, அவர்களுக்கு ஆண்டவரே பதில் சொல்லுகிறார். அவர் சிலுவைக்கு செல்லுவதற்கு முன்பு தம்முடைய சீஷர் ளோடு பந்தியிருக்கையில் சொன்னது: " இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்த மாயிருக்கிறது " என்றார் (மத். 26:28). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வானவர் தெளிவாக, அவர் சிந்துகிற இரத்தம் தான் புதிய உடன்படிக்கையை

உருவாக்கும் என்று சொல்லுகிறார். இது ஞானிகளுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது பாலகருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதைக் குறத்து எபிரெய ஆசிரியர் விவரிக்கும் போது; ஓர் உடன்படிக்கை "பிரதிஷ்டை" அதாவது ஆரம்பம் செய்வதற்கு இரத்தம் அவசியம் என்பதை தெளிவுபடுத்துகிறார். எபி. 9:18ல் " அந்தப்படி, முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை ". இதில் அந்தப்படி என்கிற வார்த்தை புதிய ஏற்பாடும் "பிரதிஷ்டை" அதாவது ஆரம்பிப்பதற்கு இரத்தம் அவசியம் என்பதை வலியுறுத்துகிறது. அப்படியே எபி. 9:18க்கு தொடர்ச்சியான வசனங்களை கூர்ந்து கவனித்து வாசித்தால்; பூமிக்குரிய சுத்திகரிப்புக்காக மிருக பலிகள் தேவைப்பட்டது. ஆனால், " பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் " (வசனம் 23) அதாவது, தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட ஆத்துமாக்கள் அதைவிட "விசேஷித்த பலிகளால் சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே. " அதாவது, மிருக பலிகளைவிட மேன்மையான பலிகளாலே சுத்திகரிக்கப்பட வேண்டும். ஆகையால், கிறிஸ்துவானவர் அந்நிய இரத்தத்தோடு அல்ல தம்முடைய சொந்த இரத்தத்தோடு தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார் என்று எபி. 9:24,25 வசனங்கள் விவரிக்கிறது. இதே கருத்தை இதே அதிகாரம் எபி. 9:11,12 வசனங்களும் ஆதரித்து விவரிக்கிறது. ஆகவே, கிறிஸ்து பிறந்த போது அல்ல சிலுவையில் மரித்து அவருடைய இரத்தத்தின் வல்லமையை, நீதியை பரலோகத்திலே தேவனுடைய சமூகத்திலே பலியாக செலுத்தி புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தி அந்த புதிய உடன்படிக்கையின் மூலம் இந்த உலகத்திற்கு பாவமன்னிப்பையும், பாவம் மன்னிக்கப்பட்ட ஆத்துமாக்கள் தேவனுடைய பரலோகத்தின் ஆசீர்வாதங்களை பெறும் பாதையையும் உண்டாக்கினார். இன்றைக்கு கிறிஸ்து என்றால் புதிய உடன்படிக்கை அல்லது புதிய ஏற்பாடு மாத்திரமே. புதிய ஏற்பாட்டின் வழியாகத்தான் பரலோகத்திற்கு போக முடியும் என்பதுதான் கிறிஸ்துவின் உபதேசம் ஆகும்.

நாங்கள் விருதாவாக இப்படிப் பேசவில்லை. இன்றைக்கு புதிய ஏற்பாட்டை மாத்திரமே கை கொள்ள வேண்டும் என்பது மனிதர்களாகிய எங்களுடைய விருப்பமோ போதனையோ அல்ல. இது தேவனுடைய சித்தமும், விருப்பமும் கிறிஸ்துவின் உபதேசமும், பரிசுத்த ஆவியினுடைய போதனையுமாயிருக்கிறது. இதைத்தான் அப்போஸ்தலர்கள் முதலாம் நூற்றாண்டிலே உறுதியாக போதித்தார்கள். முதலாம் நூற்றாண்டில் புதிய உடன்படிக்கை செய்துதான் தேவனுடைய பிள்ளைகளாக கிறிஸ்துவின் சபையாராக பரிசுத்த கூட்டமாக தேவனை ஆராதித்து அவர்கள் வாழ்ந்தார்கள். தேவன் சொல்லாத, அவரால் ஏற்படுத்தப்படாத ஒரு உடன்படிக்கையை உபதேசத்தை போதித்து கை கொண்டு நான் கிறிஸ்தவன் என்று சொல்வது தன்னைத்தான் ஏமாற்றிக் கொண்டு பலரை மோசடி செய்வதாயிருக்கிறது. உடன்படிக்கை என்பது இருதிறத்தாருக்கிடையில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமாயிருக்கிறது. புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை என்பது நாம் தேவனோடு ஓர் ஒப்பந்தம் (உடன்படிக்கை) செய்கிறோம். "நான் கிறிஸ்துவின்

உபதேசத்தின்படி, கீழ்ப்படிந்து, ஆராதித்து நடைமுறை வாழ்க்கை எல்லா வற்றிலும் கிறிஸ்துவைப்போல வாழ்வேன் அதுவும் மரணம் வரை வாழ்வேன் என்பதாகும். அப்பொழுது தேவன் நம்மோடு ஒப்பந்தம் செய்கிறார். நீ கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்தவனாக நடந்து, ஆராதித்து மரணபரியந்தமும் நடந்தால் நித்திய ஜீவனையும் என்றென்றுமான பரலோக வாழ்க்கையையும் ஆசீர்வாதங்களையும் தருவேன். இந்த ஒப்பந்தங்கள் நாங்களாக சொல்லவில்லை வேதத்திலே புதிய ஏற்பாட்டிலே விவரிக்கப்பட்டுள்ளது.

தேவன் இப்படிச் சொல்லவில்லை. நீ புதிய பழைய ஏற்பாடுகள், உலக பாரம்பரியங்கள், மனித கற்பனைகள், விக்கிரக ஆராதனைகள், மாம்சத்தின் கிரியைகள் எல்லாவற்றையுஞ் செய்தாலும் உனக்கு நித்திய ஜீவனையும், பரலோக வாழ்க்கையையும், ஆசீர்வாதங்களையும் தருவேன் என்று சொல்லவில்லை.

ஆகையால், புதிய ஏற்பாட்டிற்கு (உடன்படிக்கைக்கு) கீழ்ப்படிந்து, தேவனை ஆராதித்து, வாழ்ந்து, பரலோக ஆசீர்வாதங்களை உண்மையில் பெற கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை அன்புடன் அழைக்கிறோம். இன்னும் தொடர்ந்து இரு உடன்படிக்கைகளையும் பற்றி அடுத்த இதழிலும் பேசுவோம் என கர்த்தருக்குள் நம்புகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

✳

## வாழ்க்கையில் உண்மையிலேயே வெற்றி வெற்றி பெறுபவர்கள் யார்?

1. தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறவர்கள் தான் வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றி பெறுபவர்கள் (2 கொரி. 5:6)
2. தங்களைத் தாமே வெறுத்து, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் தான் வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றி பெறுபவர்கள் (மத். 16:24)
3. இரட்சிப்பைப் பற்றிய நிச்சயம் உடையவர்கள் தான் வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றி பெறுபவர்கள் (1 யோ. 5:13)
4. பரலோகத்தில் முதலீடு செய்பவர்களே வாழ்க்கையில் உண்மையிலேயே வெற்றி பெறுபவர்கள் (மத். 6:19,21)
5. தங்கள் ஆத்துமாக்களின் மதிப்பை உணர்ந்தவர்கள் தான் வாழ்க்கையில் உண்மையிலேயே வெற்றி பெறுபவர்கள் (மாற்கு 8:36,38)

# மகிழ்ச்சி

**_Bro. Shan Jackson_**

வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள் இங்கிலாந்தின் பிரதம மந்திரியாக 1940-ம் வருடம் மே மாதம் 10ந் தேதி பொறுப்பேற்ற அந்த விழாவில் இந்த வார்த்தைகளைச் சொன்னார்; " எல்லாம் என் தலைவிதியோடு நடக்கிறதாக உணர்கிறேன், என்னுடைய கடந்த கால வாழ்க்கையெல்லாம் இந்நேரத்திற்காகவும், இச்சோதனைக்காகவும் என்னை ஆயத்தம் செய்வதற்காகவே செலவிடப்பட்டிருக்கிறது " என்று. அந்த வாக்கியத்தில் கிறிஸ்தவர்களுக்கு தேவைப்படும் அதிகமான உண்மைகள் அடங்கியிருக்கிறது. நம் வீடு என்றழைக்கப்படுகிற இந்த பூமி நம்முடைய வீடே அல்ல. ஆம், கிரகம் என்றழைக்கப்படுகிற இப்பூமி நம் வீடு அல்ல. இது வெறுமனே ஆயத்தமாவதற்கான ஓர் இடம். ஒரு தற்காலிக குடியிருப்பு. இந்த உலகம் என் வீடல்ல, நான் இதன் வழியாகக் கடந்து செல்கிறேன் அவ்வளவுதான். மேகங்களுக்குப் பின்னால் என் பொக்கிஷங்களெல்லாம் சேர்த்து வைக்கப்படுகிறது. பரலோகத்தின் கதவைத் திறந்து தூதர்கள் என்னைக் கையசைத்து அழைக்கிறார்கள். இந்த உலகமாகிய வீட்டில் இருப்பதாக நான் ஒருபோதும் உணரமாட்டேன்". "*இந்த தேகத்தில் குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்*" என்று பவுல் சொல்லியுள்ளார் (II கொரி. 5:7).

சாலொமோன் ஞானியால் எழுதப்பட்ட மிகப் புகழ் வாய்ந்த நீதிமொழிகளில் ஒன்றைக் கொண்டு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். ஞானி " *மன மகிழ்ச்சி நல்ல ஔஷதம்* " என்றார் (நீதி. 17:22). ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி ஒரு பொதுவான ஒன்றாக இருக்கிறது. அப்படி இருக்க வேண்டும். மகிழ்ச்சி நம் ஒவ்வொருவருக்கும் அனுதின நண்பனைப் போல் இருக்க வேண்டும். சந்தோஷம் " ஒரு நல்ல மருந்து " என்று சாலொமோன் சொல்கிறார். நம் உடலுக்கு எப்படி மருந்து இருக்கிறதோ அப்படித்தான் நம் இதயத்திற்கு சந்தோஷம் இருக்கிறது. இந்த உண்மையை சாலமோன் தேவனிடத்திலிருந்து மட்டுமல்ல, தன் சரீர தகப்பனிடமிருந்தும் கற்றிருக்கக் கூடும். " *துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமாலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்*" என்று தாவீது எழுதியுள்ளார் (சங். 1:1,2). இங்கே சங்கீதக்காரன், சந்தோஷம் என்பது தேவனைப் பற்றிய அறிவும், அவருடைய சித்தத்தைப் பற்றிய அறிவுமாகும் என்று சொல்கிறார்.

மற்ற எல்லாவற்றைப்போல, மகிழ்ச்சி மனநிலையைச் சார்ந்திருப் பதாகவே உள்ளது. இயேசு அடிக்கடி மனநிலை குறித்துப் பேசியிருக்கிறார். "*என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்*" என்று. (யோவா 16:33) அதன் பின்பு, " உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் " என்றார். சிலருக்கு சந்தோஷம் என்பது தேடியும் கண்டுபிடிக்க முடியாத ஒன்றாகி விடுகிறது. ஆனால், தேவனுடைய தெய்வீக நோக்கத்தைப் புரிந்து கொள்பவர்களுக்கு அது 1,2,3 போல் சுலபமானது. (1) நாம் சந்தோஷமாயிருக்கவே தேவன் விரும்புகிறார் (2) நாம் சந்தோஷமாயிருப்பதற்கு தேவன் உதவி செய்வார் (3) ஆகவே, நாம் சந்தோஷமாயிருப்போம். *



## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம் – 31.
# அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள்

Bro. K. பாஸ்கர்

திருமறை ஆசான் வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசுவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களில் அநேகர் இந்த தொடர்கட்டுரையைப் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபைக்கு மனந் திரும்பி வருவது குறித்து மிகவும் கர்த்தருக்குள் மகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து படியுங்கள் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்ற பாடத்தை இந்த மாதத்தில் கற்றுக் கொள்வோம். அநேகர் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் இன்னும் உயிரோடு இருப்பதாகவும், தங்கள் சபையில் அவர்கள் தான் வழி நடத்துனர்களாக இருக்கின்றனர் என்றும் விசுவாசிக்கின்றனர். எனவே, நாம் இது குறித்து தெளிவாகப் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை அறிந்து கொள்வோம்.

### I அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் யார்?

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் முதல் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கிறிஸ்துவின் சபைக்கு அஸ்திபாரக் கற்களாக இருந்தனர் என்று வேத வசனம் கூறுகின்றது. " அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்தி பாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசு கிறிஸ்து தானே மூலைக் கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசை வாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" என்று வேதவசனம் கூறுகின்றது (எபே. 2:20,21). இந்த வசனப்பகுதியில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் அஸ்திபாரக் கற்களாகவும் இயேசு கிறிஸ்து மூலைக்கல்லாகவும் இருக்கிறார் என்று கூறுகின்றது. அதைத்தொடர்ந்து, அதாவது அஸ்திபாரக் கற்கள் மேல் இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரும் ஜீவனுள்ள கற்களாக கட்டப்பட்டு மாளிகையாக, பரிசுத்த ஆலயமாக எழும்பு கிறது என்று வசனம் கூறுகின்றது.

ஒரு மாளிகையோ, அல்லது சாதாரணமான வீடோ கட்டப்படும்பொழுது அஸ்திபாரக்கற்கள் மேல் பல கற்களைக் கொண்டு கட்டப்படுகின்றது. இதுதான் கட்டுமானப் பணியின் முறை! யாராவது திரும்பத் திரும்ப அஸ்திபாரக் கற்களை மேலே கட்டுவார்களா! இது முறையல்ல! அதுபோல சபையின் ஆரம்ப காலத்தில் அதாவது, முதல் நூற்றாண்டில் அஸ்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் சபையின் அஸ்திபாரக் கற்களாக இருந்தனர் என்று புதிய ஏற்பாடு போதிக் கின்றது.

முதல் நூற்றாண்டு முடிய, முடிய அப்போஸ்தலர்கள் இரத்த சாட்சி களாய் மரித்துக் கொண்டு வந்தார்கள் (அப். 12:1,3) அப்போஸ்தலனாகிய

பவுலும் இப்பொழுதே நான் பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். நான் தேகத்தை விட்டு பிரியும் காலம் வந்தது என்றார் (2 தீமோ 4:6). ஆகவே, அப்போஸ்தலர்கள் அனைவரும் முதலாம் நூற்றாண்டிலேயே மரித்து விட்டார்கள். அவர்கள் கைகளினாலே தீர்க்கதரிசனம் வரம் பெற்றவர்களும் மரித்துவிட்டனர். புதிய ஏற்பாடு முழுமை அடைந்து விட்டது. இன்று அப்போஸ்தலர்களும் இல்லை, தீர்க்கதரிசிகளும் இல்லை. அவர்கள் அஸ்திபாரக் கற்களாக மட்டும் இருந்தனர். இன்றும் இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரும் ஜீவனுள்ள கற்களாக கட்டுப்பட்டு வருகிறோம். இப்போது சபை மாளிகை யாகவும், பரிசுத்த ஆலயமாகவும் செயல்படுகின்றது (1 கொரி. 3:16,17).

**II அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் சபையின் ஆரம்ப கால ஊழியங்களுக்காக விசேஷித்த வரங்களைப் பெற்றிருந்தனர்.**

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் சபையின் ஆரம்ப காலத்தில் அதாவது முதல் நூற்றாண்டில் அற்புதம், அடையாளம் செய்யும் வல்லமையைப் பெற்றிருந்தனர். தீர்க்கதரிசிகள் தேவனுடைய வசனத்தை வெளிப்படுத்தினர் அப்போஸ்தலர் மூலமாக ஆவிக்குரிய விசேஷித்த ஒன்பது வரங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டன. அவை எல்லாம் தேவனுடைய வசனத்தையே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (1 கொரி. 12:7,11) இதன் மூலமாக அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டனர் (யோவான் 16:13) சபையின் ஆரம்ப நாட்களில் அவர்களைப் பரிசுத்த ஆவியானவர் பெலப்படுத்தி அவர்களுடைய ஊழியங்களை உறுதிப்படுத்தினார் (அப். 1:8).

அவர்களுடைய ஊழியம் எருசலேம், யூதேயா, சமாரியா மற்றும் பூமியின் கடைசிபரியந்தம் முழுவதும் சென்றடைந்தது. சுவிசேஷமானது உலகமெங்கும் பரம்பிப் பலன் தந்தது. (கொலோ. 1:6) பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளுக்கு விசேஷித்த வரங்களைக் கொடுத்து ஊழியத்தை நிறைவேற்றினார் (2 தீமோ. 4:5,8).

இன்று அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் ஆரம்பித்த ஊழியத்தில் நாம் அனைவரும் இருக்கின்றோம். இன்று நாம் விசேஷித்த வரங்களை அப்போஸ்தலர் மூலமாக பெற்றுக்கொள்ள அவர்கள் உயிருடன் இல்லை! அவர்களால் உறுதிசெய்யப்பட்ட வேதமும், ஊழியமும் இருக்கின்றது. அதுவே போதுமானதாக உள்ளது. வேதத்தைத் தவிர வேறு ஆகமம் இல்லை. கர்த்தருடைய ஊழியத்தைத் தவிர ஊழல்கள் இல்லை! (எபி. 2:4).

முதல் நூற்றாண்டில் சபையின் ஊழியம் ஒரு குழந்தையைப் போல இருந்தது. நாளுக்கு நாள் சபையின் ஊழியம் வளர்ந்து ஒரு வாலிபப் பருவமாக வளர்ந்திருந்தது. நாம் குழந்தையாயிருந்தபோது மூன்று சக்கர சைக்கிளைப் பயன்படுத்தினோம். பெரியவர்களாக வளர்ந்த பிறகும் மூன்று சக்கர சைக்கிளை விரும்புவோமா? அதை பயன்படுத்துவோமா? அப்படிப்

பயன்படுத்தினால் பார்ப்பவர்கள் நம்மை பைத்தியம் பிடித்தவர் என்று தானே சொல்லுவார்கள். அதுபோல அன்று ஆரம்ப நாட்களில் அற்புத வல்லமை தேவைப்பட்டது. இன்று ஊழியம் வளர்ந்து பெருகி இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக ஊழியம் நடைபெற்று வருகிறது. இன்று அற்புத வல்லமை ஊழியத்திற்கு தேவை இல்லை என்பதை புரிந்து கொண்டு இயேசு கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தப்படுவோமாக! (வெளி. 22:7).

### III அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் தற்காலிகமானவர்கள்

அப்போஸ்தலர்களுடைய உபதேசம் நிரந்தரமானவை, தீர்க்கதரிசிகள் சொன்ன தீர்க்கதரிசன வசனங்கள் நிரந்தரமானவை. ஆதி சபையார் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாயிருந்தார்கள் (அப். 2:42). அப்போஸ்தலர் உபதேசித்த முறைமைகளை மட்டும் அவர்கள் கைக் கொண்டார்கள் (2 தெச. 2:15) இயேசுவின் சகோதரர் யூதா எழுதும்பொழுது "ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக தைரியமாய் போராடும்படி சொல்லி அப்போஸ்தலரால் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவு கூரும்படி எழுதுகிறார் " (யூதா 3,17) அப்போஸ்தலரால், தீர்க்கதரிசிகளால் உறுதி செய் யப்பட்ட வசனத்தைக் கவனித்திருக்கும்படி சொன்னார்கள் (2 பேதுரு. 1:19). ஏனென்றால், மாம்சமெல்லாம் புல்லைப்போலவும், மனுஷருடைய மகிமை யெல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது புல் உலர்ந்தது. அதின் பூவும் உதிர்ந்தது கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே (1 பேதுரு 1:24,25) அப்போஸ்தலர், தீர்க்கதசிரிகள் மாம்சத்தில் இருந்த மனிதர்கள் அவர்கள் நிரந்தரமானவர்கள் அல்ல, அவர்களுடைய பதவிகளும் நிரந்தரமானவைகளல்ல! அவைகள் எல்லாம் புல்லைப்போலவும், புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது அவையெல்லாம் ஒழியும் வசனம் மட்டுமே ஒழியாது.

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் தற்காலிகமானவர்களாக இருந்தனர். சபையின் தோற்றத்தின் நாட்களிலே அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் அற்புத வல்லமைகளை செய்யும்படி தேவன் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி னார். அந்த அற்புத வல்லமைகள் முதல் நூற்றாண்டில் ஒழிந்து போகும், தீர்க்கதரிசன வரங்கள் ஓய்ந்து போகும் என்று அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு எழுதினார்கள் (1 கொரி. 13:8,10) ஆகவே, அவர்கள் தற்காலிகமானவர்கள்.

அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் மரித்தபிறகு அவர்கள் ஸ்தானத்தில் அதாவது அப்போஸ்தலராக, தீர்க்கதரிசிகளாக செயல்பட தேவன் யாரையும் நியமிக்கவில்லை. அவர்களுக்கென்று வாரிசுகளை நியமிக்க தேவன் எண்ணியதுமில்லை. தேவன் ஒருமுறை அழியும், ஒழியும் என்றால் அவர் சொன்னபடிதான். அவர் மனமாற அவர் மனிதரல்ல (1 சாமு. 15:29). தேவன் அற்புதவல்லமையால் இந்த உலகத்தைப் படைத்தார். ஒருமுறை படைக்கப்


பட்ட இந்த உலகம் தானாக செயல்படும்படி அமைத்தார். அதுபோல சபையும் ஆரம்பத்தில் அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகளைக் கொண்டிருந்தது. இப்போது இல்லை, சபையானது இரட்சிக்கப்பட்ட மக்களைக் கொண்டு தானாக செயல்படும்படி அற்புத வரங்களைக் கொண்டிராத தீர்க்கதரிசன வரங்களைக் கொண்டிராத சுவிசேஷகர்களையும், போதகர்களையும் ஏற்படுத்தி சபையை போஷித்து நடத்துகிறார்.


பரிசுத்த வேதாகமம், அப்போஸ்தலரால், தீர்க்கதரிசிகளால் அற்புதங்கள் நடந்தன என்றும், அதே பரிசுத்த வேதாகம் அவைகள் எல்லாம் ஒழிந்தன என்றும் கூறுகின்றதை நாம் விசுவாசிக்க வேண்டும். அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் இருந்தார்கள் என்றும் வேத வாக்கியம் கூறுகின்றது. அதே வேத வாக்கியம் அவர்கள் இல்லை என்றும் கூறுகின்றது. எனவே, அவர்களால் உறுதி செய்யப்பட்ட வேத வசனத்தை ஏற்றுக்கொள்வோம். யாராவது இன்று உங்களிடத்தில் வந்து நாங்கள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்று சொன்னால் முதல் நூற்றாண்டு சபையாரைப் போல அவர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருப்போம் (வெளி. 2:1,2). ✳


(தொடரும்)

## நாளும், நடப்பும்


1. நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் – மத்திய நிதி அமைச்சர் தகவல்
2. எல்லைப் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு – மன்மோகன் சிங், லீ கூட்டாக அறிவிப்பு
3. தமிழகத்தில் ஆறு மாநிலங்களவை இடங்களுக்கு ஜுன் 27ல் தேர்தல்
4. பாகிஸ்தானில் மூன்றாவது முறையாக நவாஸ் ஷெரீப் பிரதமரானார்
5. காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புப்படி தமிழகத்துக்கு தண்ணீர் தர இயலாது – கர்நாடக முதல்வர்
6. சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டியில் கோப்பையைக் கைப்பற்ற அணிகள் தீவிரம்.











**உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வை வளப்படுத்துவதற்கு எங்களிடம் ஆயத்தமாக உள்ள**
**சத்தியத்தின் குரல் சர்வதேச காலாண்டு நூல்கள்**















**கீழ்க்காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**







































Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014



தபால் செலவிற்கு
பணம் அனுப்பி
இந்நூல்களைப்
பெற்றுக் கொள்ளலாம்

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

## திருமறை தியானம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.



Printed by K.C. Senthilkumar at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor S. Rajanayagam